www.tamilarangam.net

# களத்தில்

மலைபோல் மக்கள் சக்தி எமக்குப் பின்னால் இருக்கும் வரை எந்தப் புதிய சவாலையும் நாம் சந்திக்கத்தயார்.

- *தமிழீழத் தேசியத் தலைவர்*


நவள்ளுவர் ஆண்டு 2028 (31.12.1997) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (151) அன்பளிப்பு: 60p

## யுதமுனையில் அரசியல் பணிவைப் பெற முயற்சி சிங்களத் தேசியக் கொடிகள் விநியோகம்

ரித்தானிய காலனித்துவ அரசு, ங்கைத் தீவை விட்டு வெளியேறி ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. பிரித் னிய அரசு, தமிழர்கள் அன்று ரிவித்த நியாயமான அச்சங்களையும் ளிவான வரலாற்று விளக்கங்க ளயும் பொருட்படுத்தாமல் சிங்கள ரும்பான்மை ஆட்சி தோன்றக்கூடிய சோல்பரி அரசியல் யாப்பின் மூலம் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கியது. இதற்காக சோல்பரி ஆணைக்குழுவின் தலைவராக இருந்த சோல்பரி பிரபு அவர்களே பின்னர் மனம் வருந்தி கருத்து வெளியிட்டமை உலகறிந்த விடயம். இந்த ஆண்டு சிறிலங்கா அரசு இந்த வரலாற்று நிகழ்வை பொன்விழாவாகக் கொண்டாடுகிறது. ஆயினும் உண்மை வரலாற்றையும் யதார்த்த நிலைகளையும் எடுத்து விளக்குவதற்குப் பதிலாக இந்தப் பொன்விழாவை, தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை

தொடர்ச்சி 10 ம் பக்கம்.....

நத்தார் நன்நெறிகளும்
புத்தாண்டு நல்வாழ்த்துக்களும்
இத்தால் விளம்புகின்றேன்
'களத்தில்' நானும்



விடுதலைப் பயணத்தில்
வீணான சுமைகளில்லை
வீறுடன் நாமும் எழுந்திட்டால்
விடுதலையும் விரைந்து வரும்.
தரணி எங்கும் தமிழர்கள்
தமிழீழ விடுதலையில் திரண்டிட்டால்
தாய் மண்ணும் மீளவரும்
தனியரசும் எமதாகும்.

# பெப்ரவரி நாலுக்குள் பாதை திறக்க ரத்வத்த கண்டிப்பான உத்தரவு

### சிங்களத் தளபதிகளின் கோரிக்கை நிராகரிப்பு

றிலங்காவின் 50வது சுதந்திர ளான பெப்ரவரி நான்காம் கதிக்குள் தரைப்பாதை திறக்க பட வேண்டும் என, சிறிலங்கா டையினருக்கு பிரதிப் பாது ாப்பு அமைச்சர் ரத்வத்த கண்டிப்பான உத்தரவு இட்டு ள்ளதாகத் தெரிகிறது.

விடுதலைப் புலிகளின் கடும் எதிர்ப்புகளினால் குழம்பிய நிலையில் சிறிலங்கா இராணுவத் தளபதிகள் மழை பெய்வதை சாட்டாகக் காட்டி ஜெய சிக்குறுய்' நடவடிக்கைக்கு சிறிது கால அவகாசம் கேட்டதாகவும், ஆனால் 'பாதை திறப்பு' விவகாரத்தை அரசியல் ஆதாய மாகக் கருதும் ரத்வத்த அதனை மறுத்து பெப்ரவரி நான்காம் திகதிக்குள் பாதை திறக்கப்பட வேண்டுமென விடாப்பிடியாக உள்ளாரெனத் தெரிகிறது. ஜெயசிக்குறுய்' இராணுவ நடவடிக்கையைத் தொடங்கி எட்டு மாதங்களாகியும்


தொடர்ச்சி 10 ம் பக்கம்...

## களுத்துறைச் சிறை இனக்கொலைகள் சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை

களுத்துறையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த வர்கள் இனக்கொலை செய்யப் பட்டமை தொடர்பாக சர்வதேச மன்னிப்புச் சபை பாரபட்சமற்ற முழு அளவிலான விசா ரணையை வற்புறுத்தியுள்ளது.

மேலும் சர்வதேச மன்னிப்புச் சபை, சம்பவத்தின் பொழுது கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் தமிழ்க் கைதி களுக்கு எதுவித பாதுகாப்பும் வழங்க முற்படவில்லை என்ப தையும் விளக்கியுள்ளது.

தொடர்ச்சி 10 ம் பக்கம்...



தமிழ்க்குலப் பெண் வயிற்றில் – இன்று
சிறுத்தைகள் உதிக்கின்ற காலமல்லோ !
சீறும் புலி பதுங்குவது – பெரும்
புயலொன்று வீசுமெனும் கோலமல்லோ !
"சம்புமால் குமாரயா " படை – தன்சிரசில்
மண்வாரி இறைக்கின்ற காலமல்லோ !

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# பாதை திறப்பு பற்றிய ரத்வத்தவின் புதிய சூளுரையும் உள்நோக்கமும்

- சுப்பு

சிறிலங்கா அரசாங்கத்தைப் பொறுத்தவரை, இந்தப் பொன்விழாக் கொண்டாட்டத்தின்போது எதையாவது கூறியாகவேண்டிய கட்டாயம். எதிர்வரும் பெப்ரவரி மாதம் நான்காம் திகதி, ஐம்பதாவது சுதந்திர தினக் கொண்டாட்டத்தின்போது, இராணுவ வெற்றியை அல்லது அரசியல் வெற்றியை பகிரங்கமாக, பெருமையாக அறிவிக்கவேண்டிய கட்டாயத்திற்கு சிறிலங்கா அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது. எட்டு மாதங்களைக் கடக்கும் நிலையிலும் நகரமுடியாமல் திணறிக்கொண்டிருக்கும் ஜெயசிக்குறுய், இராணுவ வரலாற்றில் ஒரு அவமானகரமான அடையாளமாய் போய்விடலாம் என சிறிலங்கா அரசு அச்சப்படுவதில் அர்த்தமிருக்கின்றது. பெரும் எடுப்பில் பலமுறை முனைந்தும், களஉக்திகளை மாற்றியும், புதிய தளபதிகளை நியமித்தும் எடுத்துக்கொண்ட பலதரப்பட்ட முயற்சிகள் இறுதியில் தோல்வியாகவே முடிந்துள்ளன என்பதில், வெற்றி நிச்சயம் என்ற பொருள்தரும் ஜெயசிக்குறுய் நடவடிக்கையின் வெற்றி குறித்து சிறிலங்கா அரசு சந்தேகப்படுவது நியாயமானதே.

இந்த இராணுவ நடவடிக்கை இடைநடுவில் சிக்குண்டு, அரசின்மீதான கடும் விமர்சனத்துக்கு வழிவகுத்துள்ள நிலையில், இழப்புக்கள் கட்டுக்கடங்காமல் போய்க்கொண்டிருக்கும் நிலையில், இந்த இராணுவ வெற்றியை அரசியல் ஆதாயத்துக்கான பெரும் பிரச்சாரத்தளமாகப் பாவிக்கமுடியாத கையறுநிலை அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், சந்திரிகா அரசு தேர்தல் என்ற புதிய ஆயுதம் ஒன்றைக் கைமிலெடுத்துள்ளது.

குடாநாட்டில், உள்ளூராட்சி அமைப்புகளுக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. வேட்புமனுக்கள் பெறப்பட்டு, தேர்தலுக்கான திகதி ஜனவரி 29 என அறிவிக்கப்பட்டும் ஆயிற்று.

இத் தேர்தலைப் பொறுத்தவரை, தமிழ்மக்கள்மீது வேண்டுமென்றே அவர்களின் அபிப்பிராயங்களுக்கு, அவர்களின் தேவைக்கு மாறாகத் திணிக்கப்படுகின்ற சனநாயக விரோத நடவடிக்கை என்றே கொள்ளப்படவேண்டும். இத்தேர்தலில் போட்டியிடும் தமிழ்க் குழுக்கள்கூட சனநாயகத் தேர்தலுக்கான உகந்த சூழ்நிலை குடாநாட்டில் இல்லை எனவும், தேர்தலை பிற்போடுமாறும் பலதடவை விடுத்த வேண்டுகோள்களை சந்திரிகா அரசு, இலகுவாக புறக்கணித்துவிட்டு இத்தேர்தலை நடத்த முனைந்துள்ளது.

ஒருவேளை, தேர்தலை பிற்போடும் தேவை சிறிலங்கா அரசிற்கு இருக்கும் பட்சத்தில், இக்குழுக்களின் கோரிக்கைகளை ஏற்று தேர்தலை பிற்போடுவதாய் அரசு நாடகமாடக்கூடும். ஆனால் தேர்தலின் தேவை அரசிற்கு இருப்பதாலும், தமிழ்க்குழுக்களின் பலவீனத்தை அது நன்றாகவே புரிந்துவைத்திருப்பதாலும், தமிழ்க் குழுக்களின் வேண்டுகோள்களை மிகச் சாதாரணமாக அலட்சியப்படுத்திவிட்டு, தேர்தல் களத்தைத் திறந்துவிட்டுள்ளது.

சனநாயகத் தேர்தலுக்கான உகந்த சூழ்நிலை இல்லை என வலியுறுத்தியபோதும், தேர்தல் களம் திறக்கப்பட்டவுடன், அனைத்துக்குழுக்களும் போட்டிபோட்டபடி களத்தில் இறங்கியுள்ளன. வழமைபோல ஒவ்வொரு காரணங்களை அவை தமக்காக தயாரித்து வைத்துள்ளன. மேற்படி குழுக்களின் தேவை தேர்தலாகவும், அதனால் கிடைக்கின்ற சொகுசு வாழ்கையாகவும் இருப்பதால், அவை தமது கோரிக்கை நிராகரிக்கப்பட்ட வருத்தமின்றி புத்துணர்ச்சியோடு களம் இறங்கியுள்ளன.

1987ம் ஆண்டு தயாரிக்கப்பட்ட வாக்காளர் பட்டியலின் அடிப்படையிலேயே இத்தேர்தல் நடைபெற உள்ளதால், 87க்குப் பின்னர், வாக்களிக்கும் உரிமை பெற்றவர்களின் சனநாயக உரிமை இத்தேர்தலில் பறிக்கப்படுகின்றது. குடாநாட்டைவிட்டு, பல்லாயிரக் கணக்கான மக்கள், இராணுவப் பயங்கரவாதம் காரணமாக வன்னிப் பெருநிலப்பரப்பென்றும், பிறநாடுகள் என்றும் இடம்பெயர்ந்து சென்றுள்ள நிலையிலும், பொதுமக்கள்மீதான இராணுவப் பயங்கரவாதப்பிடி இறுகி கழுத்து நெரிக்கப்பட்டிருக்கும் நிலையிலும், சிறிலங்கா அரசு இந்த சனநாயக நாடகத்தை ஆடத்துடித்து நிற்கின்றது.

இந்தத் தேர்தல் நாடகம் ஒருபுறம் அரங்கேறத் துடித்து நிற்க இராணுவச் சூழுரைப்புகளும் தொடர்கின்றன.

ஜெயசிக்குறுய், நடவடிக்கையின் ஆயுள் கேள்விக்குறியாகியுள்ள நிலையிலும், பெப்ரவரி 4ஆம் திகதிக்கு முன்னர் கிளிநொச்சிக்கான தரைவழிப்பாதை திறக்கப்படும் என, சிறிலங்காவின் பிரதிப் பாதுகாப்பமைச்சர் அனுருத்த ரத்வத்த அறிவித்திருக்கின்றார்.

இந்த அறிவிப்பு பொதுவாக சிறிலங்காவின் அச்சம் காரணமாக விடப்பட்டதாகவும் இருக்கலாம் எனக்கருத இடமுண்டு.

சிறிலங்காவின் 50வது சுதந்திரக் கொண்டாட்டத்தின்போது, சிறிலங்காப் படையினர்மீது பாரிய தாக்குதல்கள் எதனையும் விடுதலைப் புலிகள் நடத்தக்கூடும் என்ற அச்சம் சிறிலங்கா அரசை வாட்டவே செய்கின்றது. அதேவேளை, இராணுவ வெற்றியில் நம்பிக்கையற்ற நிலையில் தேர்தலை நடத்தி அரசியல் வெற்றிகொண்டாட அரசு தீர்மானித்துள்ள நிலையில், குடாநாட்டில் விடுதலைப் புலிகள், தமது நடவடிக்கையை முடுக்கிவிடக்கூடும் என்ற அச்சமும் கூடவே சிறிலங்கா அரசை வாட்டுகின்றது.

இந்த நிலையில், இந்தப் பிரச்சினைகளில் இருந்து விடுபடும் எண்ணத்துடன், விடுதலைப் புலிகளை வன்னிக்களம் நோக்கி இழுத்துவிடும் திட்டத்துடன் மேற் கொள்ளப்பட்ட பிரச்சார நடவடிக்கையாக, ரத்வத்தவின் சூழுரைப்பு இருக்கலாம் என, படைத்துறை ஆய்வாளர்கள்கூறும் கருத்துக்களில் உண்மை இல்லாமலும் இல்லை.

சாதகமான காலநிலையில் சாத்தியப்படாத பாதைதிறப்பு, பாதகமான காலநிலையில் சாத்தியப்படுமா? எனவே, ரத்வத்தவின் இந்தச் சூழுரைப்பிலும், வன்னிக்களத்தில் ஏற்படுத்தப்படும் ஆர்ப்பாட்டத்திலும் விடுதலைப் புலிகளின் கவனத்தைக் கவரும் முயற்சி தென்படுவதாகவே கொள்ளலாம்.மாவீரர் வாரத்தின்போதும் விடுதலைப் புலிகள் பிறபகுதிகளில் பாரிய தாக்குதலை நடத்தலாம் என்ற அச்சம் காரணமாக, அவ்வாரத்திற்கு சில நாட்களுக்கு முன்னதாக ஜெயசிக்குறுயின் மூன்றாம் கட்டம் சற்று ஆர்ப்பாட்டத்தோடு ஆரம்பித்து அப்படியே அரவமின்றி அடங்கிப்போயிற்று என்பது இத்தருணத்தில் ஒப்பிட்டுப் பார்க்கக்கூடியதே.

இராணுவத்தினரின் சடலங்கள் வரிசையாக கொழும்புவராத ஒரு சுதந்திர நாளையே சிறிலங்கா அரசு எதிர்பார்க்கின்றது. அதற்காக அது எதை யெதையோ பேசியும் எழுதியும் செயற்பட்டும் பார்க்கின்றது.

பொன்விழாவை முன்னிட்டு சிறிலங்கா அரசாங்கத்தால் தமிழ்மக்கள்மீது ஏவி விடப்பட்டுள்ள, இராணுவமுயற்சியும், அரசியல் முயற்சியும் வெற்றி பெறுமா என்பது பெப்ரவரி 4ஆம் திகதிக்கு முன்னதாகத் தெரிந்துவிடும். ✳

> சனநாயகத் தேர்தலுக்கான உகந்த சூழ்நிலை இல்லை என வலியுறுத்தியபோதும், தேர்தல் களம் திறக்கப்பட்டவுடன், அனைத்துக்குழுக்களும் போட்டிபோட்டபடி களத்தில் இறங்கியுள்ளன. வழமைபோல ஒவ்வொரு காரணங்களை அவை தமக்காக தயாரித்து வைத்துள்ளன. மேற்படி குழுக்களின் தேவை தேர்தலாகவும், அதனால் கிடைக்கின்ற சொகுசு வாழ்கையாகவும் இருப்பதால், அவை தமது கோரிக்கை நிராகரிக்கப்பட்ட வருத்தமின்றி புத்துணர்ச்சியோடு களம் இறங்கியுள்ளன.

# விடுதலை பெற்ற இனமாக தமிழர் வாழ்வர்

–தென்னாபிரிக்கா பேராயர் டெஸ்மன் ரூற்று

"விடுதலை பெற்ற இனமாக தமிழர் வாழ்வர்" என்ற நம்பிக்கையையும் உறுதியினையும் தென்னாபிரிக்கா ஆயர் டெஸ்மன் ரூற்று வெளிப்படுத்தியுள்ளார். தென்னா பிரிக்காவின் அங்கிலிக்கன் திருச்சபையின் பேராயரான டெஸ்மன் ரூற்று, நெல்சன் மண்டேலா சிறை யில் இருந்தபோது நேரடியாக குரல் கொடுக்க முடியாத நிலையில் அவர் சார்பாக மக்களுக்கு வழிகாட்டி ஊக்குவித்து சரியான நெறியிலே நடாத்தி வந்தார். இவரது இந்த உயர் பணிக்காக இவருக்கு சமாதானத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பேராயர் டெஸ்மன் ரூற்றுவின் நம்பிக்கை 1998இல் நிறைவேறட்டும் என்பதே புலம்பெயர் தமிழர்கள் அனைவரதும் விருப்பாக உள்ளது. ✳

# இலண்டனில் நடைபெற்ற களுத்துறைச் சிறைப் படுகொலைகளுக்கு எதிரான கவன ஈர்ப்புப் போராட்டம்

சிறிலங்காவின் களுத்துறைச் சிறைச்சாலையில் 12-12-97இல், சிங்கள அரசின் சதியால் தமிழ் அரசியல் கைதிகள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து லண்டனில் தமிழர் மனித உரிமைகள் மையத்தால் "கவன ஈர்ப்புப் போராட்டம்" ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.
இக் கவன ஈர்ப்புப் போராட்டத்தில், 450இற்கும் மேற்பட்ட பிரித்தானியா வாழ் தமிழ் மக்கள் கலந்து கொண்டு, இம் மிலேச்சத்தனமான படுகொலைகளுக்கு எதிரான தமது கண்டனத்தைத் தெரிவித்தனர்.
மாலை 4 மணிக்கு ஆரம்பித்த இப் போராட்டம் இரவு 7 மணி வரை தொடர்ந்தது. இப் போராட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் சிறிலங்காவின் சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரும் மிக நீளமான பதாகையையும் பல சுலோக அட்டைகளையும் தாங்கி நின்றனர். அத்துடன், சம காலத்தில் சந்திரிகா அரசினால் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளும், தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பல்முனை ஒடுக்குமுறையும் இப் போராட்டத்தின் போது கோசங்களால் வெளிப்படுத்தப்பட்டது.
இப் போராட்டத்தின் முடிவில், தமிழர் மனித உரிமைகள் மையத்தால் பிரித்தானியப் பிரதமருக்கு 'மனு' ஒன்றும் கையளிக்கப்பட்டது. ✳



www.tamilarangam.net



## படை விலகி அமைதி திரும்பட்டும்

**1998** ஆம் ஆண்டு, தமிழீழ மக்களினதும் தேசத்தினதும் அச்சுறுத்தலாக உள்ள சிங்கள ஆக்கிரமிப்பு படை விலகி அமைதி திரும்பும் ஆண்டாக மலரட்டும் என்ற வாழ்த்துரையுடன் புலம்பெயர் தமிழீழ மக்கள் அதனை வரவேற்கின்றனர்.

1997ஆம் ஆண்டில், சிறிலங்கா அரசு தனது இறுதி தீர்வைத் திணிப்பதற்கு இரண்டு தடைகள் தமிழர்களிடையில் இருப்பதாக இனங்கண்டது. ஒன்று, தமிழ் மக்கள் தமது தமிழீழ தேச இனம் என்னும் நிலைப்பாட்டில் காட்டும் அசைக்க முடியத உறுதி. அடுத்தது, தமிழர்கள் தேச இனமாக நிலைத்து நிற்பதை ஆதரித்து பாதுகாப்பதில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் காட்டிவரும் தேசிய பாதுகாப்பு ஆற்றல்.

இதில் இரண்டாவதாக உள்ள தமிழ் மக்களின் தேசிய பாதுகாப்புக் கவசமான தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையையும் அவர்களின் இராணுவ வலிமையையும் அழித்தொழிப்பதன் மூலமே தமிழீழ தேச இனம் எனும் தகுதியினைத் தரைமட்டமாக்கலாம் என்பது சிறிலங்காவின் முதலாவது நோக்கு. இதற்காக "சமாதானத்திற்கான போர்" எனும் பெயரில் யாழ். குடாநாடு மீதான ஆக்கிரமிப்பை அப்பட்டமாக நடாத்தி முடித்த சிறிலங்கா, இவ்வாண்டில் 'ஜெயசிக்குறு'வை நடாத்தி வன்னியூடாக பாதை திறக்க முயற்சிக்கிறது. பாதை திறக்கத் தொடங்கி, 'புலி வாலை பிடித்தவன் நிலை'க்கு உள்ளாகி நிற்கிறது சிறிலங்கா. சிங்களப் படைகள் மீது தொடரும் அதிர்ச்சி வைத்தியங்கள் சிறிலங்கா அரசை மிகவும் திணறடிக்கிறது. ஆனாலும், தனது அரசியல் சுயலாபங்களுக்காக தமிழ் மக்களை மட்டுமல்ல, சிங்கள மக்களையும் பகடைக்காய்களாக்கும் சந்திரிகா அரசு, மேலும் மேலும் சிங்களப் படையினரை போர்க்களத்தில் குவித்து அவர்களைக் காவு கொடுக்கிறது. மறுபக்கத்தில் விடுதலைப் புலிகள் நவீன ஆயுதங்களைக் கைப்பற்றிக் கொள்ள களத்தையும் அமைத்துக் கொடுத்துள்ளது.

அத்துடன், விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக வெற்றி கொள்வது இயலாத காரியமென சிறிலங்கா அரசிற்கு பல வெளிநாட்டு இராஜதந்திரிகள் எடுத்துக் கூறி பேச்சுவார்த்தைகளின் மூலமே பிரச்சினையைத் தீர்க்கலாம் – தீர்க்க வேண்டும் என அவர்கள் வற்புறுத்தும் அளவிற்கு 'ஜெயசிக்குறு' சிறிலங்காவுக்குத் தோல்வியைக் கொடுத்துள்ளது.

இருப்பினும், பேச்சுவார்த்தை என்ற உச்சரிப்புக்கே தடையாக உள்ள 'ஆக்கிரமிப்புப் படைகளை' விலக்குவதற்கான எந்த முயற்சிகளையும் சிறிலங்கா அரசு இதுவரை செய்யவில்லை. மாறாக, மேலும் மேலும் தனது படைகளைக் குவித்து எட்டாவது மாதமாக படை நடவடிக்கையைத் தொடருகிறது. 1998 மாசி மாதம் 4ஆம் நாள் தனது 'பொன்விழா' மாயையினைத் தொடங்குவதற்கு இடையில் பாதையைத் திறந்துவிட வேண்டும் எனும் வெறியை தனது படையினருக்கு ஊட்டி, மேலும் மேலும் பாரிய தாக்குதல்களைத் தொடங்க ஆயத்தமாகி வருகிறது.

இதேநேரத்தில் வெளிநாட்டு அழுத்தங்களில் இருந்து தப்புவதற்காக யாழ். குடாநாட்டில் பொம்மை உள்ளூராட்சி ஒன்றை உருவாக்க அரசியல் சதி நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளது. அவ்வாறு உருவாக்கப்படும் பொம்மைப் பிரதிநிதிகளிடம் உள்ளூராட்சியை ஒப்படைத்துவிட்டு, அவர்களுக்குப் பாதுகாப்பாகவே தனது இராணுவம் அங்கு நிலைகொண்டுள்ளது எனக்கூறி, தனது இராணுவ ஆக்கிரமிப்பை நியாயப்படுத்தும் நரித்தனத்தில் சிறிலங்கா அரசு இறங்கியுள்ளது.

மக்களைப் பற்றியோ, அவர்களின் மனித உரிமைகள் பற்றியோ அக்கறையற்ற சிறிலங்கா அரசு, முன்னர் எட்டு வாக்குகள் பெற்றுவர்களையும் ஒரு இலட்சம் மக்கள் வாழ் தொகுதிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களாக அறிவித்து உலக உலா அனுப்பியதுபோல, தேர்தல் நடந்தால் என்ன நடக்காவிட்டால் என்ன, 'உள்ளூராட்சி பிரதிநிதிகள்' என்ற பெயருடன் தனது கையாட்கள் சிலரை 'பொன்விழா'வில் மேடையேற்றி சர்வதேச பிரதிநிதிகளுடன் கைகுலுக்க வைப்பார்கள் என்பதே நடைபெறப்போகும் வித்தையாகும்.

97ஆம் ஆண்டின் தோல்விகளை சிங்கள மக்களின் தலைகளில் போட்டுவிட்டு, இராணுவ ஆக்கிரமிப்பு மூலம் தமிழீழ மக்களையும் தமிழர் தாயகத்தையும் இனஅழிப்பும் உருக்குலைப்பும் செய்யும் தனது செயற்திட்டத்தையே 98இலும் சந்திரிகா அரசு தொடரப் போகிறது.

இதனால்தான் தமிழீழத் தேசத் தலைவர் பிரபாகரன், "போராடியே எமது மண்ணை மீட்க வேண்டியவர்களாக உள்ளோம்" என தமது மாவீரர் உரையில் தெட்டத்தெளிவாக கூறியுள்ளார். அத்துடன், திம்பு பேச்சுவார்த்தையில் ஏற்கப்பட்ட அடிப்படைகளாக தமிழர் தாயக உரிமை, தமிழரின் சுயநிர்ணய உரிமை என்பவற்றின் அடிப்படையில் முன்வைக்கப்படாத எந்தத் தீர்வும் போராட்டத்துக்கான முடிவாக முடியாது என்பதையும் விளக்கியுள்ளார். இந் நிலையில், 1998ஆம் ஆண்டு இலங்கைத் தீவு காலனித்துவத்திலிருந்து விலகிய ஐம்பதாவது ஆண்டாகவும், சர்வதேச மனித உரிமைகள் சாசனம் ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்ட 50வது ஆண்டாகவும் அமைகிறது. இந்நேரத்தில் காலனித்துவம் விலகிய 50 ஆண்டுகளும் இலங்கைத் தமிழர்களுக்கு எவ்வாறு நவகாலனித்துவத்தையும் அந்நிய ஆட்சி ஒன்றையும் உருவாக்கியுள்ளது என்பதையும், சர்வதேச மனித உரிமைகள் சாசனம் எப்படி எல்லாம் இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் வன்முறைப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் உலகுக்கு எடுத்துக் கூற வேண்டிய பொறுப்புள்ள ஆண்டாக 98ஆம் ஆண்டு அமையப் போகிறது. இது ஒரு சவால் ஆண்டாக அமையப் போகிறது என்றாலும் மிகையாகாது. ஏனெனில், சிறிலங்கா அந்நிய அரசு தனது பணபலத்தையும் செல்வாக்குகளையும் பிரயோகித்து சர்வதேச பரப்புரை ஒன்றின் மூலம் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் அர்த்தமற்றது எனக் காட்டுவதற்கான அனைத்து வேலைகளிலும் இறங்கி நிற்கிறது. இந்தச் சவாலை முறியடித்து, தமிழீழ மக்கள் முன்னைய சிங்களப் பெரும்பான்மை அரசுகளாலும் இன்றைய அரசாலும் எப்படியெல்லாம் இனஅழிப்பு செய்யப்பட்டு அமைதி இழந்த வாழ்வுக்குத் தள்ளப்பட்டனர் என்பதை உரக்கக் கூறி, தமிழர் தேசிய விடுதலைப் போராட்டத்தை தேசியத் தலைவர் பிரபாகரன் தலைமையில் நடாத்துகின்றனர் என்பதை உலகுக்கு நிறுவவேண்டிய பெரும் பொறுப்பினை புலம்பெயர் தமிழர்கள் 1998இல் எதிர்நோக்கி நிற்கின்றனர். அதுமட்டுமல்ல தமிழீழ மக்கள் தங்களது பிரிக்கப்பட முடியாத மனித உரிமையான சுயநிர்ணய உரிமையினை பிரகடனப்படுத்தியதற்காக அவர்களது மனஉறுதியை குலைப்பதற்காக இன்றைய சிறிலங்கா அரசால் உணவுத் தடை, மருந்துத் தடை, தொழில் முயற்சிக்கு தடை, கல்விக்குத் தடை என பல்வேறு தடைகளை ஏற்படுத்தி இராணுவ முற்றுகைக்குள் தமிழ் மக்களை ஒடுக்குகின்றனர் என்பதை எடுத்துக் காட்ட வேண்டிய பெரும் பொறுப்பும் புலம்பெயர் தமிழர்களது கடமையாகிறது. மேலும் மக்கள் மீதான பேரர், மனிதாயத்துக் எதிரான குற்றங்கள், பாலியல் வன்முறைகள், இனஅழிப்புகள் போன்ற சர்வதேச அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் எதிரான செயல்களை சிறிலங்கா எவ்விதம் சட்டபூர்வமான செயலாக செய்து வருகிறது

என்ற உண்மையையும் அம்பலப்படுத்த வேண்டும். இந்த சர்வதேசப் பரப்புரையுடன் புலம்பெயர் மக்கள் தம்மாலான சகல உதவிகளையும் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு வழங்குவதை 1998ஆம் ஆண்டின் தலையாய கடமையாக கொள்வார்களேயானால், 1998ஆம் ஆண்டில் ஆக்கிரமிப்புப் படைகள் விலக்கப்பட்டு அமைதி எமது தேசத்திற்கு திரும்பும் என்பதே எமது அசைக்க முடியாத நம்பிக்கையாக உள்ளது. ✳

# "விசாரணை செய் அல்லது விடுதலை செய்"

**சி**றிலங்கா சிறைச்சாலையில் மீண்டும் ஒரு தமிழர் படுகொலை சம்பவம் நிறைவேற்றப்பட்டுள்ளது. களுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்கள் மூவர், சிங்கள கைதிகளால் கோரமான முறையில் தாக்கி படுகொலை செய்யப்பட்டுள்ளனர். வேறு பல தமிழ் இளைஞர்கள் படுகாயங்களுக்கு உள்ளான தோடு, மருந்துவகை வழங்கப்படாத நிலையில் பெரும் அவலத்துக் குள்ளாகியுள்ளனர். எண்ணிக்கையில் 1983–ம் ஆண்டு வெலிகடையில் தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட அளவில் இல்லையெனவும் அப்படுகொலை சம்பவத் திலிருந்து வேறுபட்ட தொன்றாக வும் இதனைக் கருத இடமில்லை. ஏனெனில், அப்படுகொலைச் சம்பவத்திற்கு சிறிலங்கா அரசாங்கமோ சிறைக் காவலர்களோ எத்தூரம் ஒத்துழைப்பும் அங்கீகாரமும் வழங்கினரோ, அதே ஒத்துழைப்பினையும் அங்கீகாரத் தினையும் இப்படுகொலைச் சம்பவத்திற்கும் வழங்கினர் என்று கூறுவதில் தவறில்லை. அதாவது இப்படுகொலைகள் சந்திரிகா அரசாங்கத்தினாலும் சிறைச்சாலை அதிகாரிக ளினாலும் திட்டமிட்ட ரீதியில்

## நீதி கோரியோர் படுகொலை

அரங்கேற்றப்பட்டன என்பது உண்மை யேயாகும். மறுவளமாகக் கூறுவதானால், இப்படுகொலைக்கான சந்தர்ப்பத்தை அரசாங் கமும் சிறைச்சாலை நிர்வாகமும் உருவாக்கிக் கொடுத்ததோடு, படுகொலை க்கான சூழ்நிலையையும் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தது எனலாம். ஆனால், இப்படுகொலைகளை வெலிக் கடை சிறைச்சாலையில் அரங்கேற்ற அரசாங்கம் விரும்பவில்லை. ஏனெனில், ஏற்கனவே தமிழ் இளைஞர்களின் படுகொலைக்குப் பெயர் கேட்டுவிட்ட வெலிகடைச் சிறைச்சாலையில் மீண்டும் ஒரு படுகொலைச் சம்பவங்கள் இடம்பெறுவதில் அரசின் கவனக் குறைவால் நிகழ்ந்தது என்ற கண்டனத்தை விரைவிலேயே உரு வாக்கக் கூடியதாகும். அடுத்ததாக, கொழும்பு நகரில் உள்ள இச்சிறையில் நடைபெறும் படுகொலைகள் சர்வதேச செய்திச் சேவைகளில் முதன்மை பெற்று அரசாங்கத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தி விடும் என்பதினாலும் ஆகும். இத்தனைக்கும் "விசாரணை செய் அல்லது விடுதலை செய்" என்பது தமிழ் இளைஞர்களின் கோரிக்கைகளாக இருந்தது. வருடக்கணக்கில் காரணமின்றி சிறையில் வாடும் தமிழ் இளைஞர்களின் கோரிக்கைகள் நியாயமானவையாகும். அதாவது தமிழ் இளைஞர்கள் நீதிக்கு மாறாகவோ அன்றி சட்டத்திற்குப் புறம்பானதாகவோ கோரிக் கையை முன்வைக்கவில்லை. ஆனால், சந்திரிகா அரசாங்கம் அவர்களுக்கு நீதி வழங்கத் தயாராக இருக்கவில்லை. மாறாக அவர்களை அச்சுறுத்திப் பணியவைக்கும் முயற்சியிலேயே இறங்கியது. இதன் காரணமாகவே அவர்களை வெலிகடைச் சிறையிலிருந்து களுத்துறைச் சிறைச் சாலைக்கு மாற்றியது. இம்மாற்றமே அரசாங்கம் இவ் இளைஞர்களை வஞ்சம் தீர்க்க அல்லது அச்சுறுத்த முனைகின்றது என்பதை வெளிப்படுத்த போதுமான அம்சமாக இருந்தது. இதன் வெளிப்பாடு களுத்துறை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட உடனேயே வெளிப்படவும் செய்தது.

தமிழ் இளைஞர் ஒருவர் பலத்த தாக்குதலுக்கு உள்ளாகியதனால் அவர் காலில் முறிவு ஏற்பட்டு நடக்க முடியாத நிலை ஏற்பட்டது. இவ்வாறான அச்சுறுத்தல் ஆரம்பம் முதலே இருப்பினும் இப்படு கொலைகள் இடம் பெறுவதற்கு இரு தினங்களுக்கு முன்னதாக சிங்களக் கைதிகள், தமிழ் இளைஞர்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்ட வண்ணமே இருந்துள்ளனர். ஆனால், இதனைச் சிறைச்சாலை நிர்வாகம் கண்டு கொள்ளவில்லை. அவ்வாறு கண்டு கொண்டிருந்தால் இப்படுகொலைகளைத் தடுத்துநிறுத்தியிருக்க முடியும். ஆனால், சிறைச்சாலை நிர்வாகம் இப்படு கொலை களை ஊக்குவித்தது போலவே நடந்துகொண்டது. இல்லாவிடில் தாக்குதல் நடத்திய சிங்களக் கைதிகளுக்குக் கத்திகள், கம்பிகள் போன்ற பொருட்கள் கிடைக்கப் பெற்றிருக்க வாய்ப்பில்லை. இந்த வகையில் நீதிகோரிய தமிழ் இளைஞர்களை, சந்திரிகா அரசு திட்டமிட்டு படுகொலை செய்துள்ளது என்பதே வெளிப்படையானது.

எதிர் காலத்தில் இது குறித்து எழும் அழுத்தங்களினாலோ, சர்வதேச சமூக த்தைத் திருப்திப்படுத்திக் கொள்வத ற்காகவோ சந்திரிகா அரசாங்கம் விசாரணைக்குக் கூட உத்தரவிடலாம். ஆனால், இதுவெறும் கண்துடைப்பு நடவடிக்கையாக மட்டுமே இருக்க முடியும். இவ்விசாரணை அறிவிப்பானது, கொழும் பிலுள்ள தமிழ் குழுக்கள் தமது அரசியலைத் தொடர்ந்து நடத்தவும் சிறிலங்காவுக்கு வெளியில் இருந்து உதவமுனைபவர்கள் அரசை நியாயப்படுத்திக் கொள்ளவும் போதுமானதாகும். ✳

> எண்ணிக்கையில் 1983–ம் ஆண்டு வெலிகடையில் தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட அளவில் இல்லையெனவும் அப்படுகொலை சம்பவத்திலிருந்து வேறுபட்டதொன்றாகவும் இதனைக் கருத இடமில்லை. ஏனெனில், அப்படுகொலைச் சம்பவத்திற்கு சிறிலங்கா அரசாங்கமோ சிறைக்காவலர்களோ எத்தூரம் ஒத்துழைப்பும் அங்கீகாரமும் வழங்கினரோ, அதே ஒத்துழைப்பினையும் அங்கீகாரத்தினையும் இப்படுகொலைச் சம்பவத்திற்கும் வழங்கினர் என்று கூறுவதில் தவறில்லை.

www.tamilarangam.net



# மாவீரர்களது தாயகக் கனவுகளை நினைவாக்குவோம்!

"அடாது மழை பெய்தாலும் விடாது யுத்தம் தொடரும்" என சிறிலங்கா பாதுகாப்பு துணை அமைச்சர் அநுருத்த ரத்வத்த சூழுரைத்திருக்கிறார்.

சிங்கள–பௌத்த பேரினவாதத்திற்கு ரத்வத்த தூபதீபங்காட்டி அதற்கு மடைபோடுவதால் அவரது செல்வாக்கு சிங்கள–பௌத்த பேரினவாதிகள் மத்தியில் வெகுவாக உயர்ந்துள்ளது.

அமைச்சரவைக்குள்ளும் அவரது கையோங்கி இருப்பது தெளிவாகத் தெரிகிறது.

இதனால்தான் என்ன விலைகொடுத்தும் வவுனியா–கிளிநொச்சிப் பாதையைத் திறக்குமாறு அநுருத்த ரத்வத்த தனது இராணுவத் தளபதிகளுக்கு கட்டளை பிறப்பித்துள்ளார்.

எப்படியும் எதிர்வரும் பெப்ரவரி 4ம் திகதிக்கு முன், ஐம்பதாவது சுதந்திரதினக் கொண்டாட்டத்திற்குமுன், வவுனியா கிளிநொச்சிப் பாதைத்திறப்பு பூர்த்தியாகிவிட வேண்டும் என்பது ரத்வத்தவின் இலக்காக இருக்கிறது.

சனாதிபதி சந்திரிகா, துணைப்பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்த இருவருக்கும் இந்தப் பாதைத்திறப்புப் பிரச்சினை மானப் பிரச்சினையாகி விட்டதென்பது தெளிவு.

குறிப்பாக துணையமைச்சர் ரத்வத்தவுக்கு நிச்சயமாக இது கௌரவப்பிரச்சனை என்பதைச் சொல்லத் தேவையில்லை.

வவுனியா கிளிநொச்சிப் பாதை திறப்பை எண்ணி 45 நாட்களுக்குள் வெற்றிகரமாக முடிக்கவேண்டும் என்பதே துணைப் பாதுகாப்பு அமைச்சரின் திட்டமாகும்.

இதன்பிரகாரம் மே 13ஆம் நாள் சுபவேளை பார்த்து ஆரம்பிக்கப்பட்ட ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை யூன்மாதம் 28ம் நாள் முடிந்திருக்க வேண்டும்.

ஆனால், இன்று 6 மாதங்கள் முடிந்தும் ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை பாதிக்கிணறைத் தாண்டியவன் கதைபோல் வவுனியா–கிளிநொச்சிப் பாதை நடுவில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறது.

'எடிபல' இராணுவ நடவடிக்கைமூலம் வவுனியா மன்னார் பாதையை எந்தவித எதிர்ப்புமின்றித் திறந்ததுபோல, வவுனியா–கிளிநொச்சிப் பாதையையும் எளிதாகத் திறந்துவிடலாம் என்று துணையமைச்சர் ரத்வத்த போட்ட கணக்கு முற்றாகப் பிழைத்துவிட்டது.

முன்னைய எந்த இராணுவ நடவடிக்கையும் இந்தளவுக்கு நீடித்ததில்லை.

இவ்வளவு ஆள்இழப்பும் ஆயுத இழப்பும் கூட இடம்பெற்றதில்லை.

**ஒரு அந்நிய இராணுவம் அந்நிய மண்ணில் கால் கொள்ள முடியாது. தப்பித்தவறி கால்கொண்டாலும் நீண்ட காலம் நிலைத்து நிற்க முடியாது.**

எண்ணூறுக்கும் அதிகமான துருப்புக்கள் இறந்தும், 4500 துருப்புக்களுக்குமேல் காயம் அடைந்தும் இருப்பதை பாதுகாப்பு அமைச்சே ஒத்துக்கொண்டுள்ளது.

களத்தில் இறந்த துருப்புக்களின் உடல்கள் மீட்கப்படாது விட்டால், அதனை சண்டையில் காணாமல் போனோர் (Missing In Action) பட்டியலில் பாதுகாப்பு அமைச்சு சேர்த்துவிடுவதால் இறந்த துருப்புக்களின் எண்ணிக்கை 800 போல் இன்னும் இரு மடங்கு இருக்கும் என்பது நிச்சயம்.

இறந்த துருப்புக்களின் எண்ணிக்கையை பாதுகாப்பு அமைச்சு வேண்டுமென்றே குறைத்துச்சொல்லி விடுகிறது. காரணம் இறந்ததை ஒப்புக்கொண்டால், இறந்த சிப்பாயின் குடும்பத்துக்கு நஸ்டஈடு கொடுக்கவேண்டும். சம்பளம் கொடுக்கப்பட வேண்டும். இதைத்தவிர்க்க இறந்தவர்களை MIA க்குள் அமைச்சு அடக்கிவிடுகிறது.

ஒரு போக்குவரத்துப் பாதைக்காக வேறு எந்த நாடும் எந்த இராணுவமும் இத்தனை விலை கொடுத்ததாக சரித்திரமே இல்லை.

*விடுதலைப் புலிகளுடன் பேசி இந்தப்பாதைப் பிரச்சினையைத் தீர்த்திருக்கலாம்.*

*விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கும், இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கும் இடையில் மக்கள் போக்குவரத்துக்காக விடுதலைப் புலிகளும் இராணுவமும் பேசி பாதைகளை ஆங்காங்கு திறந்திருக்கிறார்கள்.*

*எனவே, ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை வெறுமனே இராணுவம் சொல்வதுபோல் பாதை திறப்புக்கு மட்டும் ஆரம்பிக்கப்பட்டதாகச் சொல்ல முடியாது.*

*அதன் உண்மையான நோக்கம், விடுதலைப் புலிகளை சண்டைக்கு இழுத்து அவர்களில் எத்தனைபேரைக் கொண்றொழிக்க முடியுமோ அத்தனை பேரையும் கொன்று அவர்களது பலத்தைக் குறைப்பதே ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையின் அந்தரங்க நோக்கமாக இருக்கிறது.*

*பாதுகாப்பு அமைச்சின் கணக்குப்படி, ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையின்போது 4000 துக்கும் அதிகமான விடுதலைப் புலிகள் இறந்துள்ளார்கள். இதைப்போல் இன்னொரு மடங்கு காயப்பட்டுள்ளார்கள். மீதி 2500 விடுதலைப் புலிகளே களத்தில் நிற்கிறார்கள்.*

*ஒரு யுத்தத்தில் எதிரியின் பலத்தையும் பலவீனத்தையும் துல்லியமாக மதிப்பிடுவது அவசியமாகும். அதிலும் எதிரியின் பலத்தை குறைத்து மதிப்பிடுவது மதியீனமாகும்.*

*ஆனால் இந்தத்தவறை சிறிலங்கா அரசு 1983ஆம் ஆண்டிலிருந்து இழைத்து வருகிறது.*

விடுதலைப் புலிகளுக்கும் சிங்கள இராணுவத்துக்கும் இடையிலான யுத்தம் கடந்த 14 ஆண்டுகளாக நடந்து வருகிறது.

சுமார் 80,000 மக்கள் இதுவரை இரண்டு பக்கத்திலும் இறந்துள்ளார்கள். இதில் 99 விழுக்காட்டினர் தமிழ் மக்களாவர்.

விடுதலைப் புலிகள் இதுவரை சுமார் 13,000 போராளிகளை விடுதலைக்கான வேள்வியில் களப்பலி கொடுத்துள்ளார்கள்.

சிங்கள இராணுவத்தினர் (விமானப்படை, கடற்படை, பொலிசார் உட்பட) இதைப்போல் இரண்டு மடங்கு தொகையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஆள் இழப்புக்களைவிட ஆயுதங்களை, போர்விமானங்களை, போர்க்கப்பல்களை பெருமளவு இராணுவம் இழந்துள்ளது.

சிறிலங்காவின் பாதுகாப்புச் செலவு கடந்த மூன்று ஆண்டுகளாக வருடம் 4,800 கோடி ரூபாயைத் தாண்டிக்கொண்டிருக்கிறது.

இந்தப்புள்ளி விபரங்கள் விடுதலைப் புலிகள் பலவீனப்படுத்தப்பட்டுள்ளார்கள் என்பதை எடுத்துக்காட்டவில்லை.

அதற்குமாறாக, தரையிலும் கடலிலும் குறிப்பாக கடலில் விடுதலைப் புலிகளின் பலம் அதிகரித்தவண்ணம் இருப்பதைக் காட்டுகிறது. ஆகாயத்தைப் பொறுத்தளவில், சிறிலங்கா விமானப்படையின் முதுகெலும்பு வளைக்கப்பட்டுள்ளது. இதுவரை விமானப் படை 22 விமானங்களை இழந்துள்ளது. இதில் 9 விமானங்கள் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகி அழிக்கப்பட்டுள்ளன.

இவையாவும் விடுதலைப் புலிகளின் பலம் அதிகரித்து வருவதைக் காட்டுவதாக இருக்கிறதே ஒழிய, அவர்கள் சனாதிபதி சந்திரிகாவும் அவரது துணைஅமைச்சர் ரத்வத்தவும் நினைப்பதுபோல் பலவீனப்பட்டு வருகிறார்கள் என்பதைக் காட்டவில்லை.

**ஒரு போக்குவரத்துப் பாதைக்காக வேறு எந்த நாடும் எந்த இராணுவமும் இத்தனை விலை கொடுத்ததாக சரித்திரமே இல்லை.**

விடுதலைப் புலிகளைப் பலவீனப் படுத்தப்போய் சிறிலங்கா இராணுவமே பலவீனப்பட்டு வருகிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்தவண்ணம் உள்ளன. சராசரி ஒருநாளைக்கு இரண்டு தாக்குதல்களாவது இடம்பெறுகிறது.

தாக்குதலின் சூடுகாரணமாக (14–11–97) யாழ்ப்பாண இராணுவத்தளபதியாகப் பதவியேற்றுள்ள மேஜர் ஜெனரல் லயனல் பலாகல (Major General Lionel Balagala) அமைதியை நிலைநாட்ட இரண்டு வேண்டுகோள்களை விடுத்துள்ளார்.

ஒன்று. சமாதானத்தையும் சுபீட்சத்தையும் நிலைநாட்ட யாழ்ப்பாண மக்கள் இராணுவத்துக்கு ஒத்துழைப்புத் தரவேண்டும்.

இரண்டு, விடுதலைப் புலிகள் நாட்டில் சமாதானத்தை நிலைநாட்ட ஒத்துழைப்பு நல்கவேண்டும்.

**-நக்கீரன்**

நாட்டில் சமாதானத்தை நிலைநாட்ட விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பைக் கேட்ட முதல் இராணுவத்தளபதி லயனல் பலாகலவாகத்தான் இருக்கவேண்டும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டை சிங்கள இராணுவம் ஆக்கிரமித்து இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகிவிட்டன.

ஆனால், அங்கு இன்னும் சிவில் நிர்வாகத்தைக் கொண்டுவர சந்திரிகாவினால் முடியாமல் இருக்கிறது.

தமிழ் மக்களின் உள்ளங்களையும் மனங்களையும் கொள்ளைகொள்ளும் முயற்சி படுதோல்வியில் முடிந்துள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பகுதிகள் பல இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இல்லை.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள பல ஊர்கள் நுளைய முடியாத பகுதிகளாக (No go Areas) இராணுவத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இவற்றிற்கு மேலாக சுற்றிவளைப்பு, தேடுதல், கைது, சித்திரவதை, சிறை, கொலை, பாலியல் வல்லுறவு, காணாமல்போதல் இப்போது தாராளமாக இடம்பெறுகிறது.

இராணுவத்தளபதி பாலகல பதவியேற்ற அதே நாளில் விடுதலைப் புலிகள் சங்கத்தானையில் இராணுவம் மீது அதிரடித்தாக்குதலை நடாத்திருக்கிறார்கள்.

அதற்கு முதல்நாள் (13–11–97) கச்சாய், கெருடாவில் பகுதிகளில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்திமிருக்கிறார்கள்.

சங்கானையில் யாழ்ப்பாண மக்கள் இராணுவத்துக்கு ஒத்துழைப்பு நல்கவேண்டும் என்று இராணுவத்தளபதி பேசிக்கொண்டிருந்த அதேநாள் காலை 6.00 மணிக்கு காரைநகர் மக்கள் தியாகராஜா மகாவித்தியாலயத்திலும் யாழ்ரன் கல்லூரியிலும் கூடுமாறு சிறிலங்காக் கடற்படை கட்டளையிட்டு சோதனை நடாத்தியுள்ளது.

எனவே சிறிலங்கா அரசும், சிறிலங்கா இராணுவமும் சாண் ஏற முழம் சறுக்கிய கதையாக நடந்துகொள்கின்றன.

பானையில் ஒரு ஓட்டையை அடைக்க, இன்னொரு ஓட்டை வேறு இடத்தில் விழுகிறது.

வடக்கைக் கைப்பற்றப்போக கிழக்கு ஏறத்தாள 90 விழுக்காடு பறிபோய்விட்டது.

ஒரு அந்நிய இராணுவம் அந்நிய மண்ணில் கால் கொள்ள முடியாது. தப்பித்தவறி கால்கொண்டாலும் நீண்ட காலம் நிலைத்து நிற்க முடியாது.

*செச்சினியா இதற்கு அருமையான உதாரணம். நேற்றுமட்டும் இரண்டு வல்லரசுகளில் ஒன்றாக இருந்த உருசிய இராணுவத்தினால் செச்சினியாவில் கால்ஊன்ற முடியவில்லை. வெட்கத்தை களத்தில் போட்டுவிட்டு, ஆளைவிட்டால் போதும் என்று நாடு திரும்பியது.*

உருசியா–செச்சினியா, சிறிலங்கா–தமிழீழம் இரண்டிற்கும் பலத்த ஒற்றுமை இருக்கிறது.

உருசியாவினால் முடியாத ஒன்றை சிறிலங்காவினால் சாதிக்க முடியாது.

*சிங்கள தேசியத்துக்கும் தமிழ் தேசியத்துக்கும் உள்ள அடிப்படையான அரசியல், சமூக, பொருளாதார முரண்பாடுகள் முதலில் தீர்த்து வைக்கப்படவேண்டும். அப்படித் தீர்த்து வைக்கப்படாதவரை இராணுவத் தளபதி விரும்பும் அமைதி ஏற்பட வழியேயில்லை.*

*இந்த யதார்த்தத்தை, சிங்கள–பௌத்த மேலாண்மையை தமிழீழத்தில் என்னவிலை கொடுத்தும் நிலைநாட்ட நினைக்கும் சனாதிபதி சந்திரிகாவும் அவரது மதிமந்திரி அநுருத்த ரத்வத்தவும் உணர்வதாக இல்லை.*

*எண்பதுகளில் சிங்கள–பௌத்த பேரினவாதிகள் விட்ட பிழைகள் தொண்ணூறுகளிலும் தொடர்கதையாகத் தொடர்ந்த வண்ணம் உள்ளது.*

*சிங்கள இராணுவம் செந்தமிழ் மண்ணில் இருந்து விரட்டப்பட வேண்டும்.*

*தமிழ் மக்கள் அமைதியாகவும், சுபீட்சமாகவும் வாழ அவர்களுக்குச் சொந்த தாயகபூமியும் அரசும் வேண்டும்.*

*தமிழீழத் தாயகக் கனவுகளை தங்கள் நெஞ்சங்களில் சுமந்து, காற்றிலும் தீயிலும் மண்ணிலும் மறைந்துவிட்ட மறவர்களை மாவீரர்களை வழிபடும் தேசத்தில் அவர்களது தாயகக்கனவுகளை நினைவாக்குவோம் என நாம் அனைவரும் சூளுரைப்போம்.* ✲

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சந்திரிகா அரசு யுத்தத்தை நீடிக்கவே விரும்புகின்றது

யுத்தத்தை அரசு முடிவுக்குக் கொண்டுவர முனையுமா அன்றித் தொடர்ந்து நீடித்தே செல்லுமா என்பது குறித்து பலதரப்பினரிடமும் பலமான கேள்வி எழுந்துள்ளது. இதே சமயம் யுத்தம் தொடர்ந்து நீடிப்பதாயின் அது பெரும் அவலமானதாக இருக்கும் என பலதரப்பினராலும் எச்சரிக்கப்பட்டுள்ளது. அண்மையில் இது குறித்து பாராளுமன்றத்தில் பிரஸ்தாபித்த முன்னாள் வெளியுறவு அமைச்சர் சி.எஸ். கமீட், "யுத்தம் தொடர்ந்து நீடிக்குமானால், அதுவே இந்நூற்றாண்டின் அவலங்களில் பெரும் அவலமாக இருக்கும்" என எச்சரித்துள்ளார்.

ஆனால், சந்திரிகா அரசாங்கமோ இவ் எச்சரிக்கை எதனையும் பொருட்படுத்துவதாக இல்லை. தொடர்ந்தும் யுத்தத்தை முன்னெடுப்பதிலேயே குறியாக உள்ளதை, இராணுவத்திலிருந்து கடந்த பத்தாண்டு காலத்திற்குள் விலகிச் சென்றவர்களை மீண்டும் வந்து இராணுவத்தில் இணைந்து கொள்ளுமாறு ஜனாதிபதி சந்திரிகா விடுத்துள்ள அவசர அழைப்பில் இருந்தே புரிந்து கொள்ளலாம். யுத்தம் தொடர்வதானால் அது பெரும் அவலத்திலேயே நாட்டைக் கொண்டு சென்றுவிடும் என்பது வரலாறு தந்த அனுபவமாகும். மிகப் பெரும் வல்லரசுகளே இவ்வாறான யுத்தங்களில் இறங்கிய பின்னர், "பிச்சை வேண்டாம் நாயைப்பிடி" என்ற நிலையில் ஒதுங்கிக் கொண்டன. இதற்கு முக்கிய காரணமாக பொருளாதார இழப்பு இருந்தது. அதாவது பெரும் வல்லரசுகளே யுத்தச் செலவீட்டைத் தவிர்க்க இயலாது யுத்தத்திலிருந்து

> யுத்தம் தொடர்வதானால் அது பெரும் அவலத்திலேயே நாட்டைக் கொண்டு சென்றுவிடும் என்பது வரலாறு தந்த அனுபவமாகும். மிகப் பெரும் வல்லரசுகளே இவ்வாறான யுத்தங்களில் இறங்கிய பின்னர், "பிச்சை வேண்டாம் நாயைப்பிடி" என்ற நிலையில் ஒதுங்கிக் கொண்டன.

## அதுவே இந்நூற்றாண்டின் பெரும் அவலமாக அமையும்

ஒதுங்கிக் கொண்டுள்ளனர்.

இத்தனைக்கும் பொருளாதார வல்லரசுகள் மட்டும் அல்ல இராணுவ, அரசியல் ரீதியில்கூட அவை வல்லரசுகளாகவும் இருந்தவையே. ஆகையினால் இவை முன்னிற்கும் யுத்தத்திற்குத் தேவையான ஆயுத, தளபாடங்கள் பெரும்பாலானவை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுவதேயாகும். இந்நாடுகளில் அழிவு ஏற்படுமாயினும், ஒரு வகையில் வேலை வழங்கலையும் பொருளாதார நலன்களையும் உற்பத்திப் பெருக்கத்தையும் ஏற்படுத்தக் கூடியதாகவும் இருந்தது. அவ்வாறு இருந்தும் தேசிய விடுதலைப் போராட்டங்களுக்கு எதிரான போரில் அவ்வல்லரசுகளினால் வெற்றிபெற முடியவில்லை என்பது மட்டுமல்ல, அவ் யுத்தத்தினால் ஏற்படும் பெரும் பொருளாதார சுமையையும் அவற்றால் தாங்கிக் கொள்ள முடியாமற் போனது. இந்த நிலையில்தான் யுத்தத்தை கைவிட்டு வல்லரசுகள் வெளியேறி வந்தன. இத்தனைக்கும் இவ் வல்லரசுகள் பொதுவாகவே தமது தேசிய வருமானத்தில் நான்கு வீதத்திற்கும் குறைவான தொகையையே பாதுகாப்புச் செலவீனத்திற்கு ஒதுக்கீடு செய்துள்ளன. ஆனால் சிறிலங்கா அரசோ தற்பொழுது தேசிய வருமானத்தில் சுமார் ஏழு வீதம் வரையில் யுத்தத்திற்கென செலவு செய்துகொண்டு தொடர்ந்தும் யுத்தத்தை நடத்திச் செல்லவே விரும்புகின்றது. நாட்டின் கைகளில் எஞ்சியுள்ள சகல சொத்துக்களையும் அந்நியர்களுக்கு விற்றாவது யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தவே முனைகிறது. இந்த நிலையில்தான், ஏற்கனவே இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியவர்களை மீண்டும் படையில் சேர்த்துக் கொள்ள இராணுவ தலைமைப்பீடமும் ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலுள்ள அரசாங்கமும் முடிவு செய்தன. ஆனால், இம்முயற்சி வெற்றிதராத பட்சத்திலேயே தற்பொழுது ஓய்வு பெற்றவர்களை இராணுவத்தில் மீண்டும் வந்து சேருமாறு விடுக்கப்பட்ட அழைப்பும் வெளியாகி உள்ளது. இதனை

> வல்லரசுகள் பொதுவாகவே தமது தேசிய வருமானத்தில் நான்கு வீதத்திற்கும் குறைவான தொகையையே பாதுகாப்புச் செலவீனத்திற்கு ஒதுக்கீடு செய்துள்ளன. ஆனால் சிறிலங்கா அரசோ தற்பொழுது தேசிய வருமானத்தில் சுமார் ஏழு வீதம் வரையில் யுத்தத்திற்கென செலவு செய்துகொண்டு தொடர்ந்தும் யுத்தத்தை நடத்திச் செல்லவே விரும்புகின்றது. நாட்டின் கைகளில் எஞ்சியுள்ள சகல சொத்துக்களையும் அந்நியர்களுக்கு விற்றாவது யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தவே முனைகிறது.



ஒருவகையில் பார்த்தால், சிங்கள இளைஞர்கள் போரிட மறுத்த நிலையில் ஓய்வு பெற்றவர்களைப் போர் முனையில் நிறுத்த அரசாங்கம் முனைகின்றது என்றே கூறலாம். ஆனால், இவ் யுத்தத்தில் சிறிலங்கா தரப்பில் இருந்து யார் கலந்துகொண்டாலும், யுத்தத்தில் அவர்களால் இறுதி வெற்றி பெற்றுவிட முடியாது.

மாறாக, இன்னும் நீண்ட காலத்திற்கு யுத்தம் நீடிப்பதோடு, சிறிலங்கா மிக வறிய நாடுகள் வரிசையில் விரைவில் இணைந்து விடுவதற்குமே வாய்ப்பாகும். அதாவது கமீட் அவர்கள் கூறியதுபோல், இவ் யுத்தத்தினால் விளையப்போகும் பாதிப்பு இந்நூற்றாண்டின் பெரும் அவலமாகவே இருக்கும் ✷

# உலகின் எந்த மூலையில் வாழ்ந்தாலும் மண்ணின் விடுதலைக்குப் பங்காற்றலாம்

உலகப் பிரசித்திபெற்ற கணித மேதையான பேராசிரியர் ஜெயரட்ணம் எலியேசருக்கு தமிழீழத் தேசியத் தலைவர் திரு.வே. பிரபாகரன் அவர்கள் 'மாமனிதர்' என்னும் கௌரவ விருதினை வழங்கிச் சிறப்பித்துள்ளார். தமிழீழத்தாய் பெற்ற மண்ணின் மைந்தன் என்ற தேசாபிமானப்பற்றுடன் தமிழீழ மக்களின் விடிவிற்காகவும் தமிழீழத் தேசத்தின் விடுதலைக்காகவும் ஆற்றிய அரும் பணிக்காக இம்மாமனிதர், விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார். இலங்கை தமிழ்ச் சமூகம் பல கல்விமான்களை உலகிற்கு கொடுத்துள்ளது. இதன்மூலம் பல தமிழ்க் கல்விமான்கள் உலகில் புகழ் பெற்றுள்ளனர். ஆனால் புகழ் பெற்ற கல்விமான்கள் சிலரே தமது மண்ணிற்கும் மக்களுக்கும் விசுவாசமானவர்களாக பற்றுப்பாடு உடையவர்களாக இருந்துள்ளார்கள் அல்லது நடந்து கொண்டுள்ளார்கள். இந்த வகையிலே பேராசிரியர் ஜெயரட்ணம் எலியேசரும் மண்ணிற்கும் மக்களுக்கும் அர்ப்பணிப்புடன் சேவை புரிந்துள்ள ஒரு கல்விமானவர். இதன் வெளிப்பாடாகவே அவருக்கு 'மாமனிதர்' என்னும் உயர்விருது கிடைக்கப்பெற்றுள்ளது. அதாவது தன்னை உருவாக்கி வளர்த்து உலகில் பெயர் குறிப்பிடும்படியாகச் செய்த மண்ணுக்கும் மக்களுக்கும் அவர் செய்த சேவைக்காகவே இவ்வுயர் விருது வழங்கப்பட்டுள்ளது.

> இலங்கைத் தமிழ்ச் சமூகம் இன்று ஒரு வரலாற்றின் திருப்பத்தில் நிற்கின்றது. அதன் எதிர்காலம் சுதந்தர வாழ்வா? அன்றி அடிமை வாழ்வா? எனத் தீர்மானிக்கும் காலம் இதுவாகும். இந்த நிலையில் தமிழ்ச் சமூகம் தமது எதிர்காலம் குறித்துத் தீவிரமாகச் சிந்திக்கவும் தமது சுதந்திர வாழ்விற்காக முழுமூச்சுடனும் அர்ப்பணிப்புடனும் போராட வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. இவ்வரலாற்று நிர்ப்பந்தத்தில் இருந்து தமிழர் எவருமே விடுபட முடியாது.

இலங்கை தமிழ்ச் சமூகம் இன்று ஒரு வரலாற்றின் திருப்பத்தில் நிற்கின்றது. அதன் எதிர்காலம் சுதந்தர வாழ்வா? அன்றி அடிமை வாழ்வா? எனத் தீர்மானிக்கும் காலம் இது வாகும். இந்த நிலையில் தமிழ்ச் சமூகம் தமது எதிர்காலம் குறித்துத் தீவிரமாகச் சிந்திக்கவும் தமது சுதந்திர வாழ்விற்காக முழுமூச்சுடனும் அர்ப்பணிப்புடனும் போராட

தொடர்ச்சி 6 ம் பக்கம்......

www.tamilarangam.net



# யுத்தம்:

# வெற்றிப்பாதையில் உள்ளதா? பின்னடைவுகளைச் சந்திக்கின்றதா?

"இராணுவத்தினர் விடுதலைப் புலிகளிடம் இருந்து வடபகுதியை தொண்ணூற்று மூன்று சதவீதத்திற்கும் அதிகமான பிரதேசங்களை விடுவித்துள்ளனர்" இவ்வாறு 06-12-97 சனிக்கிழமையன்று, டெலிகமவில் நடந்த விழாவொன்றில் கலந்துகொண்டு பேசுகையில் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார். மேலும் அவர், "ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை மூலம் புலிகள் சிறிய பகுதிக்குள் இருப்பதற்கு வழி பிறக்கும். இது அவர்களின் நடவடிக்கையைக் கட்டுப்படுத்தும்" எனவும் தெரிவித்தார். 04-12-97 அன்று இராணுவ படைநகர்வு ஒன்றை ஆரம்பிக்கும் முன்னர் தொண்ணூறு சதவீதமான நிலப்பரப்பு இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளதாகப் பேசியிருந்த அமைச்சர் அனுருத்த ரத்வத்த, தற்பொழுது தொண்ணூற்று மூன்று சதவீதமான நிலப்பரப்பு கட்டுப்பாட்டுக்குள் வந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இதில் உள்ள முக்கிய அம்சம் என்னவெனில், படைநகர்வில் ஈடுபட்ட துருப்புக்களில் பெரும் பகுதி புலிகளால் அழிக்கப்பட்டுள்ளதோடு, படைநகர்வு முற்றாக முறியடிக்கப்பட்டதே என்பதாகும். இந்த நிலையில் அமைச்சர் அனுருத்த ரத்வத்த இந்த மூன்று வீதத்தை எங்கிருந்து பெற்றார் என்பது தற்பொழுதுள்ள கேள்வியாகும். ஏற்கனவே சொன்ன தொண்ணூறு சதவீதம் என்பதே கேள்விக்குரியதாக இருக்கின்றது என்ற நிலையிலும் மேலும் மூன்று சதவீதம் என்பதை அமைச்சர் ரத்வத்த எங்கு தேடிக் கொண்டார் என்பதும் அவருக்கே வெளிச்சம். ஏற்கனவே சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு வவுனியா - கிளிநொச்சி பாதை திறப்பதற்கு இன்னமும் இருபது கிலோ மீற்றர் மட்டுமே உள்ளது எனக் கூறியுள்ளது. இதன் பிரகாரம் மாங்குளத்தைக் கைப்பற்றிவிட்டதாகக் காட்ட முனைகிறது பாதுகாப்பு அமைச்சு.

> ரத்வத்தவின் ஒரே குறியாக இருப்பது, "யுத்தம் வெற்றியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது என்று பிரச்சாரம் செய்வதும் இதன் மூலம் ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதுமே ஆகும்"

உண்மையில் இன்னும் மாங்குளத்தைக் கூடக் கைப்பற்றவில்லை என்பதே களநிலையாக உள்ளது. இந்த ரீதியில் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்த தொண்ணூறு வீதத்தில் இருந்து தொண்ணூற்று மூன்று வீதத்துக்குப் போவதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லைதான். ஆனால், அமைச்சர் ரத்வத்த கூறுவது போன்று, 93 வீதமான பிரதேசத்தை கட்டுப்பாட்டில் இராணுவம் கொண்டுவந்திருப்பின், ஜெயசிக்குறு முடிவதற்குள் மிகுதி ஏழு வீதமும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படும் என்றே எதிர் பார்க்கலாம். அவ்வாறானால், அமைச்சர் ரத்வத்த விரைவில் பாதை திறக்கப் பட்டதும் முல்லைத்தீவுக் காட்டுப் பகுதிக்குள் புலிகள் ஒடுக்கப்பட்டு விடுவார்கள் எனக் கூறுவதன் அர்த்தம் என்ன? அதாவது 100 வீத நிலப்பரப்பு கட்டுப்பாட்டில் வந்தபின்னர் விடுதலைப் புலிகள் வாழ்வதற்கு இடம் ஏது? அவ்வாறு இல்லாவிடில் அமைச்சர் முல்லைத்தீவுக் காட்டுப்பகுதி வடபகுதிக்குள் அடங்காது எனக் கருதுகின்றாரா? அல்லது முல்லைத்தீவு காட்டுப்பகுதி இலங்கைக்கு வெளியில் உள்ளதொரு நிலப்பரப்பென எண்ணுகிறாரா? ஆனால், அமைச்சர் ரத்வத்த இவ்வாறு எதையும் சிந்திப்பதாக இல்லை. அவர் சிந்திப்பவராக இருப்பின் வடக்கின் பெரும்பகுதிகளில் புலிகள் ஆயுதப் படையினர் மீது தாக்குதல்களை நடத்திக் கொண்டிருக்கையிலும் வன்னிப் பெருநிலப்பரப்பில் இராணுவம் பின்னடைவுகளை சந்தித்துக் கொண்டிருக்கும் போதும் புலிகள் ஒடுக்கப்பட்டுவிட்டனர், 93 வீத நிலம் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது எனப் பேசமாட்டார். ஆனால், ரத்வத்தவின் ஒரே குறியாக இருப்பது, "யுத்தம் வெற்றியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது என்று பிரச்சாரம் செய்வதும் இதன் மூலம் ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதுமே ஆகும்" என்பது வெளிப்படையானது. இந்த நிலையில் அனுருத்த ரத்வத்த, எத்தோல்விகளையோ அன்றி பின்னடைவுகளை ஏற்றுக்கொள்ளவோ அன்றி யுத்தத்தை நிறுத்தவோ தயாராக இருக்கமாட்டார். ஆகையினால் அனுருத்த ரத்வத்த கூறுவதைப் போன்று, யுத்தம் வெற்றிப்பாதையில் உள்ளதா? அன்றி பின்னடைவுகளைச் சந்திக்கின்றதா? என்பதை, சிங்கள மக்கள் தமது பகுத்தறிவு மூலமே கண்டுகொள்ள வேண்டும்.

## சிங்கள மக்களே பகுத்தறிய வேண்டும்

இதனை சிங்கள மக்கள் பகுத்தறியாது விட்டால் இன்று மட்டுமல்ல என்றுமே ரத்வத்த போன்ற அரசியல்வாதிகள் யுத்தத்தைத் நடாத்து வதோடு ஆட்சி அதிகாரத்தையும் தக்கவைத்துக் கொள்வார்கள் என்றே துணிந்து கூறலாம்.✷

> ஏற்கனவே சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு வவுனியா - கிளிநொச்சி பாதை திறப்பதற்கு இன்னமும் இருபது கிலோ மீற்றர் மட்டுமே உள்ளது எனக் கூறியுள்ளது. இதன் பிரகாரம் மாங்குளத்தைக் கைப்பற்றிவிட்டதாகக் காட்ட முனைகிறது பாதுகாப்பு அமைச்சு. உண்மையில் இன்னும் மாங்குளத்தைக் கூடக் கைப்பற்றவில்லை என்பதே களநிலையாக உள்ளது.

## உலகில் எந்த மூலையில்...

வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. இவ்வரலாற்று நிர்ப்பந்தத்தில் இருந்து தமிழர் எவருமே விடுபடமுடியாது. இதில் ஆண், பெண் என்ற பால் வேறுபாடோ அன்றி முதியோர், இளையோர் என்ற வயது வேறுபாடோ இருக்கமுடியாது. அவ்வாறு இல்லாது விடுபட முனைபவர்கள் தமது இனத்திற்கான வரலாற்றுக் கடமையை மறந்தவர்களாகவே இருக்க முடியும். அத்தோடு, இன்று இலங்கையில் நடைபெறும் தமிழீழ மக்களின் சுதந்திரப் போராட்டமானது, தனியாக இலங்கையில் வாழும் தமிழருக்கு மட்டுமானதல்ல. புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களுக்கும் உரியதாகும். ஏனெனில் இதுவே அவர்களின் தாயக மண்ணுமாகும். ஆகையினால் போராட்டத்திற்கான பங்களிப்பினை இலங்கைத் தீவில் இருந்து கொண்டுதான் மேற்கொள்ள வேண்டும் என்பதல்ல. உலகில் எந்த மூலையில் இருந்தாலும் போராட்டத்திற்கான பங்களிப்பையாற்ற முடியும்.

இந்த வகையிலேயே பேராசிரியர் ஜெயரட்ணம் எலியேசர் தமிழீழ மண்ணிற்கும் மக்களுக்கும் பெரும் பணியாற்றியுள்ளார். பேராசிரியர் எலியேசர் போன்று வேறு சில கல்விமான்களும் தமிழ் சமூகத்திற்கு சேவைகளைச் செய்து வருகின்றனர். எனினும் பல கல்விமான்கள் தமிழ்ச் சமூகத்திற்கு ஏற்பட்டுள்ள அபாயத்திலிருந்து ஒதுங்கிக் கொண்டுள்ளமையானது, வேதனை தரும் விடயமாகும். இவர்கள் தம் இனப் பற்றையோ தமது தாயகமண் பற்றியோ எதையும் சிந்திப்பதாக இல்லை. அவர்களின் குறிக்கோள் தமது குடும்பம் சுகபோகவாழ்வு என்பது மட்டுமாகவே உள்ளது. அவர்கள், தமிழ் இனத்தின் சிதைவானது எதிர்காலத்தில் தமது சுகபோக வாழ்விற்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதாக அமையலாம் என்பதைக்கூட சிந்திக்கத் தயாராக இல்லை. இந்த நிலையில் இவர்கள் தமிழ்ச்சமூகம் தம்மை உருவாக்கியதற்கு நன்றிக்கடன் பட்டுள்ளதைக் கூட கருத்திற்கொள்வதாக இல்லை. ஆனால் தன்னை உருவாக்கிய சமூகத்திற்கு அல்லது இனத்திற்கு கல்விமான்கள் எவ்வளவு பாதுகாவலராக இருத்தல் வேண்டும் என்று இருப்பதற்கு சிங்கள புத்தஜீவிகள் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும். ஆனால் சிங்கள புத்திஜீவிகள் போன்று தம் இனத்தையே அழிவிற்கு இட்டுச் செல்லும் இனவெறியுடன்கூடிய பற்றோ, பங்களிப்போ தேவையில்லை. தமது மக்கள் சுதந்திரமாகவும் பாதுகாப்புடனும் வாழ உறுதிசெய்யும் வகையிலான முயற்சிகளை மேம்படுத்துவதற்கான உணர்வு மட்டுமே போதுமானதாகும். ஆனால் இதனைப் புறந்தள்ளுவோர்கள் கல்விமான்களாக இருந்தால் என்ன வேறு யாராக இருந்தால் என்ன தமது தாயையே புறந்தள்ளுபவர்களாகவே இருக்கமுடியும்..✷

## உள்துறை அமைச்சின் தடையையும் மீறி புதுடெல்லியில் ஈழத்தமிழர் ஆதரவுக்கான சர்வதேச மாநாடு

இந்திய உள்துறை அமைச்சர் திரு. இந்திரஜித் குப்தா இறுதி நேரத்தில் விதித்த தடையையும் மீறி, "ஈழத்தமிழர் ஆதரவுக்கான சர்வதேச மாநாடு" புதுடெல்லியில் வெற்றிகரமாக நடந்து முடிந்துள்ளது. இம் மாநாட்டில் முன்னாள் இந்திய அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணான்டஸ் இந்திய முன்னாள் வெளியுறவுச் செயலாளர் ஏ.பி. வெங்கடேஸ்வரன், இந்திய அமைதிப் படையின் மட்டக்களப்பு பிராந்திய தளபதியாக கடமையாற்றிய லெப்.கேணல் மேத்தா உட்பட அவுஸ்திரேலியா, பிரான்ஸ், கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் இருந்து சென்ற பேராளர்களும், மட்டக்களப்பு மாவட்ட சிறிலங்காப் பாராளுமன்ற பிரதிநிதி யோசப் பரராஜசிங்கம், தென்னிந்திய - வடஇந்திய தமிழீழப் பிரமுகர்களும் கலந்து கொண்டனர். "தமிழர்களின் ஆயுதப் போராட்டம் அடிப்படையில் தமிழர்கள் உயிர் வாழ்வதற்கு அவசியமான போராட்டமாக உள்ளது" என விளக்கிய முன்னாள் இந்திய அமைச்சர் திரு. ஜோர்ஜ் பெர்ணான்டஸ், இந்திய அரசு இம் மாநாட்டை தடுத்து நிறுத்த முயன்றதையும் வன்மையாகக் கண்டித்தார்.

இம்மாநாட்டில் உரையாற்றிய முன்னாள் அமைதிப் படைத் தளபதி லெப்.கேணல் மேத்தா, "இராணுவ ரீதியாக விடுதலைப் புலிகளை வெல்ல முடியாது" எனக் கூறியதும் அல்லாமல், அரசியல் தீர்வைக் கொண்டுவர சர்வதேச சமூகம் சிறிலங்காவின் மேல் தனது அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டுமெனவும் பகிரங்க வேண்டுகோள் விடுத்தார். அத்துடன் தமிழ் மக்களுக்கு எதிரான சம்பவங்களை நேரில் பார்த்த அனுபவம் தனக்கு உண்டெனக் கூறிய அவர், எதிர்பாராதவிதமாகவே இந்திய அமைதிப் படை மோதவேண்டி நேர்ந்தது எனவும் குறிப்பிட்டார்.

முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ஏ.பி. வெங்கடேஸ்வரன், விடுதலைப் போராளிகள் தமது போராட்டத்தில் தோற்றதாக வரலாறே இல்லை என அழுத்தமாகக் கூறினார். பேராளராக மாநாட்டில் கலந்துகொண்ட பிரான்சிய பிரபல வழக்கறிஞர் ஜில்பிக்கு லா "இதை ஒரு பொதுக்கூட்டமென சொல்ல முடியாது. வடஇந்தியாவையும் தென்இந்தியாவையும் சேர்ந்த பல்வேறு அமைப்புக்கள், கட்சிகளுடைய பிரதிநிதிகளும், சர்வதேச பிரதிநிதிகளும் இலங்கை பிரதிநிதிகளுமாக இருநூற்றி ஐம்பதுக்கும் அதிகமான பேராளர்கள் பங்குபற்றிய மாநாடு" என வர்ணித்தார். அனைத்துப் பேராளர்களும் சிறிலங்கா அரசினுடைய அரச பயங்கரவாதத்தையும் அதனால் தமிழீழ மக்கள் சுயநிர்ணய போராட்டத்தைத் தொடங்கியதையும் எடுத்து விளக்கி, தமிழர்களும் சிங்களவர்களும் இரு தேசிய இனங்கள் என்பதை வெளிப்படுத்தினார். சிறிலங்கா அரசு பாரிய இனக்கொலைகள் மூலம் சர்வதேச சட்டங்களை மீறுகின்றது என எடுத்துரைத்த பேராளர்கள், பத்து வேண்டுகோள்களை இந்திய மற்றும் சர்வதேச அரசுகளுக்கு விடுத்தனர்.

∴விமான, எறிகணை குண்டு வீச்சுக்கள் நிறுத்தப்படல் வேண்டும். ∴பாலியல் வன்முறைகள் ஒழிக்கப்பட வேண்டும். ∴அரசசார்பற்ற நிறுவனங்கள் பணி புரிதலும் அகதிகள் மீதான தடைகள் நீக்கப்படுதலும் அனுமதிக்கப்பட வேண்டும். ∴பத்திரிகைத் தணிக்கை நீக்கம். ∴சிங்கள குடியேற்றத் திட்டங்கள் இடைநிறுத்தப்படல் ஆகியவை இதில் வலியுறுத்தப்பட்டன.

முக்கியமாக, இத்தீர்மானத்தில் தமிழ் மக்களின் விடுதலைப் போரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விடுதலைப் புலிகளுடன் மூன்றாம் தரப்பு மத்தியத்தத்துடன் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கு அனுசரணையாக தமிழ்ப் பகுதிகளிலிருந்து சிறிலங்கா இராணுவம் முற்றாக வெளியேற அழுத்தங்கள் பிரயோகிக்கப்படல் வேண்டுமென வற்புறுத்திக் கேட்கப்பட்டிருந்தது. ✷

www.tamilarangam.net



# "இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது இராணுவ ரீதியில் சாத்தியமாகப் போவதில்லை; அரசியல் தீர்வே சாத்தியமானது"

## பிரதியமைச்சர் கிஸ்புல்லாவின் யதார்த்தமான பேச்சு

சிறிலங்கா தொலைத்தொடர்புத்துறை பிரதி அமைச்சர் எம்.எச்.என். கிஸ்புல்லா

மக்களின் ஆதரவு விடுதலைப் புலிகளுக்கு என்றும் இருப்பதினால்

> "தமிழ் மக்களின் ஆதரவு விடுதலைப் புலிகளுக்கு என்றும் இருப்பதினால் அரசியல் ரீதியாக அவர்களைப் புறக்கணித்துவிட முடியாது. அதேபோன்று ஆயுத பலத்திலும்கூட விடுதலைப் புலிகள் மேலோங்கி நிற்பதினால் இராணுவ அடிப்படையில்கூட அவர்களைப் புறந்தள்ளி விட முடியாது"

ஆளும்கட்சி கூட்டணியை சேர்ந்த வராயினும், அவர் இனப்பிரச்சினைக்கான தீர்ப்புக் குறித்த விடயத்தில் யதார்த்தமாகப் பேசுவதாகவே காணப்படுகிறார். இது இன்றைய அரசியல் நெருக்கடியைத் தீர்த்து வைப்பதில் அவர் கொண்டுள்ள ஆர்வத்தின்பால் ஏற்பட்டதா அன்றி கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தின் தமிழ் மக்களினது வாக்குகளில் கொண்டுள்ள கரிசனையால் ஏற்பட்டதா என்பதை எம்மால் முடிவுசெய்ய முடியாது விட்டாலும், பிரதி அமைச்சர் குறிப்பிடத்தக்க ரீதியில் தெளிவாகவே பேசுகிறார். "இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது இராணுவ ரீதியில் சாத்தியமாகப் போவதில்லை. அரசியல் தீர்வே சாத்தியமானது" என வலியுறுத்தும் பிரதி அமைச்சர் கிஸ்புல்லா,

அரசியல் ரீதியாக அவர்களைப் புறக்கணித்துவிட முடியாது. அதே போன்று ஆயுத பலத்திலும்கூட விடுதலைப் புலிகள் மேலோங்கி நிற்பதினால் இராணுவ அடிப்படையில்கூட அவர்களைப் புறந்தள்ளி விட முடியாது" எனக் கூறுகிறார். பிரதி அமைச்சர் கிஸ்புல்லா சுட்டிக்காட்டி உள்ள இவ்விரு அம்சங்களின் மூலம் அரசியல், இராணுவ கள நிலைகளை அவர் தெளிவாக அறிந்துகொண்டுள்ளார் என்றே கருத இடமுண்டு. சிறிலங்கா அரசாங்கமோ அன்றி, உலகிலுள்ள எவரோ விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாத இயக்கம் எனக் கூறுவதனாலோ அன்றி, அறிவிப்பதினாலோ அவ்வியக்கம் பயங்கரவாத இயக்கமாக மாறிவிட மாட்டாது. விடுதலைப் புலிகள்



அத்தீர்வு விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அங்கீகாரத்துடனும், ஒத்துழைப்புடனும் மேற்கொள்ளப்பட வேண்டும் அல்லது மேற்கொள்ளமுடியும் எனவும் குறிப்பிடுகிறார். இவ்வாறு தான்

இயக்கத்தின் தோற்றம் அல்லது வளர்ச்சி ஒரு வரலாற்றின் நிர்ப்பந்தமாகவே உள்ளது. அதன் இன்றைய போராட்டமும் தவிர்க்கமுடியாததொன்றாகவே இருக்கிறது. சிங்களப் பேரினவாதத்திட

> தமிழரின் உரிமைக்கான போராட்டம் ஒரு வரலாற்று நிர்ப்பந்தம் என்பதையும் அதற்கு விடுதலைப் புலிகள் தலைமை தாங்குகின்றார்கள் என்பதையும் மறந்து, சிங்களவர் மத்தியில் இராணுவத் தீர்வில் வெற்றி பெற்று விடலாமென அரசாங்கம் காட்டமுனைவதும், முயற்சிப்பதும் குறுகிய அரசியல் லாபம் ஈட்டும் முயற்சியாக மட்டுமே இருக்கமுடியும். இதில் அரசு ஒருபோதும் வெற்றி ஈட்டப்போவதில்லை.

கொண்டுள்ள நிலைப்பாட்டிற்கு, "தமிழ்

மிருந்து தமிழர் தாயகத்தையும் தமிழர்

தேசத்தையும் பாதுகாப்பது அதன் கடப்பாடாக உள்ளது. இந்த நிலையில் விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழ் மக்களின் ஆதரவு பெற்ற இயக்கமாக உருவாகியுள்ளதில் ஆச்சரியப்பட எதுவுமேயில்லை. ஆகையினால், விடுதலைப் புலிகள் இயக்கத்தை புறந்தள்ளியோ அன்றி அவர்களினால் அங்கீகரிக்கப்படாத தீர்வு யோசனைகள் எதுவுமோ சாத்தியமாகப் போவதில்லை என்பது வெளிப்படையானதாகும். ஆகையினால் அரசியல் தீர்வு என்பது, புலிகளுடனேயே எட்டப்படவேண்டும் என்பது தவிர்க்கப்பட முடியாத

புலிகள் இயக்கத்தை இராணுவ ரீதியில் நசுக்கிவிடுவதற்கு அது ஒன்றும் பலவீனமானதொரு இயக்கமும் அல்ல. ஆட்லறிகள், பீரங்கிகள் உட்பட கனரக ஆயுதங்களையும், கடற்படைப் பிரிவு ஒன்றையும் அதற்கு மேலாக எல்லா வேளையும் தளராது மனவுறுதிகொண்ட போராளிகளையும் கொண்ட ஒரு அமைப்பாகும். இந்தவகையில், தமிழரின் உரிமைக்கான போராட்டம் ஒரு வரலாற்று நிர்ப்பந்தம் என்பதையும் அதற்கு விடுதலைப் புலிகள் தலைமை தாங்குகின்றார்கள் என்பதையும் மறந்து, சிங்களவர் மத்தியில் இராணுவத் தீர்வில்

> சிறிலங்கா அரசாங்கமோ அன்றி, உலகிலுள்ள எவரோ விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாத இயக்கம் எனக் கூறுவதனாலோ அன்றி, அறிவிப்பதினாலோ அவ்வியக்கம் பயங்கரவாத இயக்கமாக மாறிவிடமாட்டாது. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தோற்றம் அல்லது வளர்ச்சி ஒரு வரலாற்றின் நிர்ப்பந்தமாகவே உள்ளது. அதன் இன்றைய போராட்டமும் தவிர்க்கமுடியாததொன்றாகவே இருக்கிறது. சிங்களப் பேரினவாதத்திடமிருந்து தமிழர் தாயகத்தையும் தமிழர் தேசத்தையும் பாதுகாப்பது அதன் கடப்பாடாக உள்ளது.

நிர்ப்பந்தமாகவே சிறிலங்கா அரசக்கு இருக்கும்.

ஆனால் இந்நிர்ப்பந்தத்தினைப் போக்குவதற்கு சிறிலங்கா அரசு கைக்கொள்ளும் இராணுவத் தீர்வும் சாத்தியமாகமாட்டாது. ஏனெனில், ஒரு தேசிய இன விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவது இராணுவ ரீதியிலான அணுகுமுறை சாத்தியமாகமாட்டாது என்பது ஒருபுறமிருக்க, விடுதலைப்

வெற்றி பெற்று விடலாமென அரசாங்கம் காட்டமுனைவதும், முயற்சிப்பதும் குறுகிய அரசியல் லாபம் ஈட்டும் முயற்சியாக மட்டுமே இருக்கமுடியும். இதில் அரசு ஒருபோதும் வெற்றி ஈட்டப்போவதில்லை.

அதாவது அரசின் இம்முயற்சியானது வரலாற்று நியதிகளை மாற்றி அமைத்துவிடப்போவதில்லை. ❑


**காலத்தால் அழியாத கடமைவீரன்**

**தளபதி கேணல் கிட்டு அவர்களின்**

**ஐந்தாவது ஆண்டு நினைவுநாள்**

| இடம் : | காலம் : |
|---|---|
| Florianhalle im Westfalenpark Florian StraBe 44122 Dortmund | 17 - 01 - 1998 சனிக்கிழமை 17:00 மணிக்கு ஆரம்பம் |

**கேணல் கிட்டு அவர்களினதும் அவரோடு வீரச்சாவெய்திய ஒன்பது மாவீரர்களினதும் நினைவாக, அந்தத் தியாகதீபங்களை ஆராதிக்க யேர்மனிவாழ் அனைத்துத் தமிழர்களும் ஒன்றுகூடுவோம்.**

**கேணல் கிட்டு நினைவு ஓவியப்போட்டி 1998**

விடுதலைப்புலிகளின் யேர்மனிப் பணியகக் கலை பண்பாட்டுக் கழகம், வருடா வருடம் நடாத்திவரும் கேணல் கிட்டு நினைவு ஓவியப் போட்டியின் 1998ம் ஆண்டுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

**விண்ணப்பம் செய்வதற்கான இறுதிநாள் : 05 - 01 - 1998**

**விண்ணப்பங்களும் ஓவியங்களும் அனுப்பவேண்டிய முகவரி :** K.T.O, Post Fach 1160, 37441 Bad Sachsa

ஓவியப்போட்டிக்கான விதிகளை கலை பண்பாட்டுக்கழகம் (தமிழீழ விடுதலைப்புலிகள்) யேர்மனிப் பணியகத்திடமிருந்து அறிந்து கொள்ளலாம்.

www.tamilarangam.net

# ஐம்பது வருட கொலை வெறியாட்டத்திற்கு

## சிறிலங்கா அரசின் அரசியல், இராணுவக் காய் நகர்த்தல்களும்,

"கடந்த ஐம்பது ஆண்டு காலமாக, அடக்குமுறை என்ற ஒரே வழியில்தான் சிங்களம் சென்று கொண்டிருக்கின்றது. இந்தக் குருட்டுத்தனமான அணுகு முறையால்தான் இலங்கையில் அமைதி குலைந்து போரும் வன்முறையும் தலைதூக்கி நிற்கின்றன. இந்த அணுகுமுறையைச் சிங்கள தேசம் மாற்றிக் கொள்ளாவிடின், முடிவில்லா யுத்தத்தையும் பேரழிவையுமே அது சந்திக்க வேண்டி வரும். இந்த அழிவுப் பாதையைத் தேர்ந்தெடுத்து நிற்பது சிங்களப் பேரினவாதிகளே அன்றி நாமல்ல."

இவ்வாறாக, தற்போதைய அரசியல், இராணுவச் சூழ்நிலை குறித்து விடுதலைப் புலிகளின் கொள்கை விளக்கத்தினைத் தலைவர் பிரபாகரன் அவர்கள் 1997ம் ஆண்டு மாவீரர் தின செய்தியில் விளக்கிய போது குறிப்பிட்டார். தற்போது இந்த ஐம்பது வருட கொலை வெறியாட்டத்திற்கு 98 பெப்பிரவரியில் விழா என சிறிலங்கா அரசு அறிவித்துள்ள நிலையில் இலண்டனில் பெப்பிரவரி 1ம் திகதி இடம்பெறவுள்ள மாபெரும் ஊர்வலத்தின் அரசியல் முக்கியத்துவத்தினை இக்கட்டுரை ஆராய்கின்றது.

## களத்திலுள்ள இராணுவ, அரசியல் நிலைமைகள்

புலிகளை இராணுவரீதியாகப் பலவீனப்படுத்தி, புலிகளின் கட்டுப் பாட்டிலுள்ள தமிழீழப்பகுதிகளை சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் கொண்டு வந்து, தமிழீழ மக்கள் மீது வன்முறையைத் திட்டமிட்டுக் கட்ட விழ்த்துவிட்டு, சிங்கள மேலாதிக்கத்தை தமிழீழ மக்கள் ஏற்கச் செய்யும் கடும் முயற்சியில் சிங்களத்தின் சந்திரிகா அரசு ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது. இதற்காக தமிழர் தாயகத்தினைக் கூறுபோட்டு, தீர்வுப் பொதி எனும் அடிமை சாசனத்தைத் தயாரித்து, தமிழீழ மக்களைத் துப்பாக்கி முனையில் வன்முறை மூலம் அதில் கையெழுத்திட வைக்கலாம் என்பதே சந்திரிகா அரசின் கனவாகும். ஆயினும், களநிலைமைகளோ இந்தக் கனவிற்கு நேர் எதிராகவே சென்று கொண்டிருக்கின்றன. தீர்வுப் பொதியினை தமிழீழ மக்கள் நிராகரித்துள்ளமையை தமிழீழத்திலும் சர்வதேச ரீதியிலும் தமிழீழ மக்கள் நடத்தி வந்துள்ள அரசியற் செயற்பாடுகள் தெளிவாக உலகிற்கு எடுத்துக் கூறியுள்ளன. தலைவர் பிரபாகரன்



அவர்களும் தீர்வுப் பொதி எனும் சதி பற்றிய தெளிவானதொரு விளக்கத்தினை தனது உரையில் தந்துள்ளார். அத்துடன் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளான தமிழரின் தாயகம், தமிழரின் தேசியம், தமிழரின் தன்னாட்சி உரிமை ஆகியவை அரசியல் தீர்வுத் திட்டத்திற்கு அடிப்படையானவை என்பதையும் அவர் தெளிவாகக் கூறியுள்ளார்.

புலிகளைப் பலவீனப்படுத்துதல் என்ற இலக்கில் சந்திரிகாவின் இராணுவப் படையெடுப்புக்கள் எவ்வகையிலும் உதவவில்லை. மாறாக ஆயுத பலரீதியிலும், ஆட்பலரீதியிலும் புலிகளை மேலும் பலப்படுத்தி புலிகள் இயக்கம் மேலும் வளர்ச்சியடையவே அவை உதவியுள்ளன. மேலும் புதிதாக இடங்களைப் பிடிப்பதற்கு இராணுவம் ஏற்கனவே தமது கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளை புலிகளிடம் இழக்கும் நிலைமையே காணப்படுகின்றது. இதன் மூலம் தென் தமிழீழத்தின் பல பகுதிகளில் இன்று தமிழீழ நிருவாகம் நடைபெறுகின்றது. மக்களை வன் முறை மூலம் அவலப்படுத்தி, அச்சப்படுத்தி, களைப்படைய வைத்து துப்பாக்கி முனையில் தீர்வுப் பொதியினை ஏற்கச் செய்யும் எண்ணமும் மக்களின் உறுதியால் தவிடுபொடியாகிவிட்டது. இதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அவர்களின் கொள்கைகளுக்கும் தமிழீழத்திலும் வெளிநாடுகளிலும் தமிழீழ மக்கள் மத்தியில் பெருகியுள்ள ஆதரவே சான்றாக உள்ளது.

இவ்வாறாக நிலைமைகள் உள்ள போதும் தனது இலக்கு நோக்கி முன்னேறுவதாக ஒரு கற்பனை உலகில் மிதக்கும் சந்திரிகா தனது மாமனார் இரத்வத்த ஊடாக பெப்பிரவரி 4ம் திகதி என்ற புதியதொரு கால எல்லை ஒன்றினை அறிவித்துள்ளார். அதாவது, அடிவாங்கி சோம்பிப் படுத்திருக்கும் "ஜெயசிக்குறு" மூலம் யாழ்ப்பாணத்திற்குப் பாதை அமைத்து, புலிகளைப் பலவீனப்படுத்தி சிறு குழுவாக்கிவிட்டு பின் தீர்வுப் பொதி என்னும் அடிமைசாசனத்தினைத் தமிழர் தலையில் கட்டி, ஐம்பது வருடக் கொலை வெறியாட்டத்திற்கு பெப்பிரவரி 4ம் திகதி விழா எடுக்கவுள்ளனராம். அதாவது தடம்புரண்டு செல்லும் தனது இராணுவ அடக்குமுறை அரசியலுக்கு தமிழ் மக்களை அடிபணிய வைத்து சர்வதேசத்தையும் ஏமாற்றலாம் என்ற கணக்கிலேயே சிங்களத்தின் காய் நகர்த்தல்கள் அமைகின்றன.

இவ் அரசியல், இராணுவ முயற்சிகளை முறியடித்து, தமிழர்களின் நியாயமான அரசியல் அபிலாசைகளை முன்னோக்கி சுமந்து செல்வதற்கான திட்டங்களை தலைவர் பிரபாகரனின் வழிநடத்தலில் விடுதலைப் புலிகள் மேற்கொண்டுள்ளனர். இவற்றில் சர்வதேசகளத்தில் விரியும் சில பொறுப்புகளைச் சுமக்க வேண்டிய நிலையில் புலம் பெயர்ந்து வாழும் தமிழீழ மக்கள் உள்ளனர்.

## சர்வதேச அரசியல் நிலைமைகள்

சர்வதேச அபிப்பிராயம் என்பது இன்று எமது போராட்டத்தில் மிகமுக்கியமானதொன்றாக மாறிவிட்டது. நீதி, நியாயம் என்பவற்றிற்கு அப்பால் சொந்த நலன்களைப் பேணும் வகையிலேயே சர்வதேச நாடுகளின் அரசுகளின் முடிவுகள் அமைவது உலகில் தெளிவான வரலாறாகும். இந்த வகையில் தென்னாசியப் பிராந்தியத்தில் ஒரு முக்கியமான அரசியல், இராணுவ சக்தியாக உருவாகியுள்ள விடுதலைப் புலிகள் அமைப்பும், தமிழீழ விடுதலைப் போராட்டமும் முக்கியத்துவம் பெறுகின்றன. எதற்கும் வளைந்து கொடுத்து தலையாட்டும் சிறிலங்கா அரசு உலக ஆதிக்க சக்திகளுக்கு நேச சக்தியாக இருப்பதில் வியப்பில்லை.

ஆயினும் எந்தவோரு சர்வதேச அரசும் பலவீனமான ஒரு அரசியல் சக்திக்கு பெரியளவில் முண்டு கொடுக்கும் நிலை பனிப்போரின் பின்னைய இன்றைய நிலையில் இல்லை. எனவே, தான் பலமுள்ள நிலையில் இருப்பதாகவும் புலிகள் பலவீனப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் தமிழ்மக்கள் புலிகளைக் கைவிட்டு தனது தீர்வுத் திட்டத்தை ஆதரிப்பதாகவும் புலிகளை அழித்தபின் எல்லாம் சரியாகிவிடும் என்றும் அவ்வாறு புலிகளை அழிப்பதற்கு நீங்களும் உதவ வேண்டும் என்றும் சர்வதேசத்தை ஏமாற்றி தமிழ் மக்களை அழிப்பதே சந்திரிகா அரசின் நோக்கமாகும். இவ்வாறு உண்மைக்கு மாறாகப் பிரச்சாரத்தை நடத்திக் கொண்டு போரைத் தொடர்ந்து நடத்தின் தற்செயலாகப் புலிகள் அழியலாம் என்ற நப்பாசையும் சந்திரிகாவுக்கு உண்டு. அதாவது தலைவர் பிரபாகரனைக் கொல்வதற்கான திட்டமும் இதில் அடங்கும். அரசியல், இராணுவச் சூழ்நிலைகளைச் சரிவர ஆராய்ந்து, தன்னலமற்று, தமிழீழ மக்களின் நலன்களைப் பாதுகாப்பதில் உறுதியாக நின்று, முடிவெடுக்கும் பிரபாகரன் எனும் தலைமைதான் தமிழீழவிடுதலைப் போராட்டத்தின் உயிர் நாடி என்பதை எதிரி தெளிவாக அறிந்து வைத்துள்ளமைதான் இக் கொலைத் திட்டத்திற்கான காரணமாகும்.

ஆனால் உண்மைக்கு மாறான ஒரு பிரச்சாரத்தை மனதளவில் நம்பும் நிலையில் சர்வதேச அரசுகள் இல்லை. புலிகள் மிகவும் பலமான நிலையில் இருப்பதையும் தமிழீழ மக்களின் ஆதரவு புலிகளுக்கு பெருகி உள்ளதையும் சிறிலங்கா அரசின் மனித உரிமை மீறல்கள் பெருகியுள்ளமையையும் பல சர்வதேச அமைப்புக்கள் அண்மையில் சுட்டிக் காட்டியுள்ளன. இந்நிலையில் எதற்கும் தலையாட்டும் ஒரு முதுகெலும்பற்ற நேச அரசிற்கு ஒரு மட்டுப்படுத்தப்பட்ட ஆதரவை வழங்குவதிலும் நடுநிலைமை வகிப்பதிலுமே உலக நாடுகளின் அரசுகள் கொள்கை வகுத்துள்ளன. அத்துடன் விடுதலைப்புலிகளுடன் சிறிலங்கா அரசு பேசுவதன் மூலமே இப்போரினை முடிவுக்குக் கொண்டு வரலாம் என்றும் அவை வலியுறுத்துகின்றன. இவ்வாறாக சிறிலங்கா அரசின் அடக்குமுறைக்கு இவ்வரசுகள் பூரணமாகத் துணை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு பொன் விழா

போகாமல் இருப்பதற்கு புலிகள் பலமாக இருப்பதுவும், சிறிலங்கா அரசின் இராணுவ அணுகுமுறை தோல்வியடையும் என அவை நம்புவதும் ஒரு முக்கிய காரணம் எனினும், சர்வதேச ரீதியில் பரந்து, புலம் பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களின் அரசியல் முயற்சிகளும் இன்னொரு காரணமாகும் என்பதை மறுப்பதற்கில்லை.

## தமிழீழ மக்களின் சர்வதேச எழுச்சிப் போராட்டங்களின் பங்கு

97 அக்டோபரில் எடின்பரோ நகரில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் அரசுத் தலைவர்களின் சந்திப்பில் சிறிலங்கா அரசு தனது அரசியல் மாயவித்தைகளைக் காட்டி ஒரு சர்வதேச பிரச்சாரத்தைச் செய்யத் திட்டமிட்டிருந்தது. இதை முறியடிக்கும் விதத்திலும் தமிழீழ மக்களின் அரசியல் அபிலாசைகளை வெளிக்கொணரும் வகையிலும் தமிழீழ மக்கள் நடத்திய ஸ்கொட்லாந்து நோக்கிய மாபெரும் புரட்சிப் பயணம் அமைந்தது. இந்த அரசியல் நடவடிக்கைக்கு முட்டுக்கட்டை போட சிறிலங்கா அரசு பெரும் முயற்சி எடுத்தது. ஆயினும் தமிழ் மக்களின் முயற்சி பெரு வெற்றியைப் பெற்றுத் தந்தது. பிரித்தானியாவில் புலம் பெயர்ந்து வாழும் தமிழீழ மழலைகளும், முதியோரும், பெண்களும், ஆண்களுமாக எடின்பரோ நகரில் தமிழீழ – ஸ்கொட்லாந்து நட்புறவுப் புகைமிரதத்தில் வந்து, தமிழீழத் தேசியச் சின்னமான புலிச்சின்னம் பொறித்த பலூன்களுடன் இறங்கிய போது எடின்பரோ நகரம் புதுக்களை கட்டியது. பெருமளவிலான ஸ்கொட்டிஷ் மக்கள் வீதியோரமாகக் குழுமி நின்று வியப்புடன் பார்த்தனர். பலர் ஊர்வலத்தில் இணைந்தனர். குறிப்பாக ஸ்கொட்டிஷ் காவல் துறையினருக்கு இலங்கையில் பயங்கரவாதிகள் யார்? சிறிலங்கா அரசா அல்லது விடுதலைப்புலிகளா என்பது புரிந்தது. (புகைமிரதத்தில் தமிழ்ப் பயங்கரவாதிகள் வருகின்றார்கள் என்பதே சிறிலங்கா அரசின் குற்றச்சாட்டாகும்)

இவ்வாறாக பிரித்தானியாவில் வாழும்




தமிழ் மக்கள் தமது அரசியல் அபிலாசைகளை ஒரு தேசத்தின் மக்களாக – தமிழீழ தேசத்தின் மக்களாக– உலகிற்கு வெளிப்படுத்தினர். அத்துடன் எடின்பரோ மாநாட்டில் கலந்து கொண்ட சந்திரிகா தமிழ் மக்களின் அரசியல் நடவடிக்கையால் எழுந்த விழிப்புணர்விலிருந்து தப்பிச் செல்வதே பெரிய பாடாகிவிட்டது.

தற்போது பிரித்தானியாவில் 98ம் ஆண்டு பெப்பிரவரி 1ம் திகதி நடக்கவிருக்கும் மாபெரும் ஊர்வலத்தின் முக்கியத்திற்கு வருவோம். ஐம்பது வருட கொலைவெறியாட்டத்திற்கு சந்திரிகா அரசு பொன்விழா எடுக்கின்றது. அதை ஒட்டி ஒரு அரசியல், இராணுவ வெற்றிக்கான கால எல்லையையும் அறிவித்துள்ளது. அத்துடன் இவ் விழாவுக்கு பிரித்தானிய இளவரசர் சாள்ஸ் அவர்களும் செல்லவுள்ளதாக தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலைமையில் தான் பிரித்தானியாவில் ஐக்கிய தமிழர் அமைப்பினால் நடத்தப்படவுள்ள இம்மாபெரும் ஊர்வலம் முக்கியத்துவம் பெறுகின்றது.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு 1948ம் ஆண்டு பிரித்தானியாவில் இருந்த தொழிற்கட்சி அரசு இலங்கைத் தீவுக்குச் சுதந்திரம் வழங்குவதாகக் கூறி சிங்கள இனவெறி அரசியல்வாதிகளிடம் தமிழரின் தாயக தேசம் உட்பட்ட முழுத் தீவுக்குமான அரசியல் ஆளும் உரிமையை ஒப்படைத்தது. அவ்வாறு ஒப்படைக்கும் போது தமிழரை ஓரளவுக்கேனும் திருப்திப்படுத்துவதற்காக வெறும் கண்துடைப்பாக சில சரத்துக்களை அரசியல் யாப்பில் பிரித்தானியர் இணைத்திருந்தனர். ஆயினும் அன்றிலிருந்து வன்முறையை தனது வழிமுறையாகக் கொண்டு மாறி மாறி வந்த சிங்கள அரசுகள் தமிழர் மீது கொலை வெறியாட்டம் நடத்தின. மேலும் 1972ம் ஆண்டு சந்திரிகா அம்மையாரின் தாயாரின் அரசு அரசியல் யாப்பிலிருந்த அற்ப சொற்ப சலுகைகளையும் நீக்கி முழுவதும் சட்டவிரோதமான புதிய அரசியல் யாப்பைத் தமிழரின் சம்மதமில்லாமல் கொண்டுவந்தது. அன்றிலிருந்து தமிழர்கள் பிரித்தானியரால் செயற்கையாக உருவாக்கப்பட்ட ஒன்றிணைந்த இலங்கையிலிருந்து விடுபட்டு, 1977ம் ஆண்டு சுதந்திர தமிழீழ அரசை தமிழ்த் தேசத்தில் அமைக்கப்போவதாக சனநாயக ரீதியாக அறிவித்தனர். இந்த சனநாயக பூர்வமான தமிழீழமக்களின் நிலைப்பாட்டை வன்முறை மூலம் அழிக்க முயலும் சிங்களப்படைகளிடமிருந்து தமிழரின் தாயகம், தமிழரின் தேசியம்,



தமிழரின் தன்னாட்சி உரிமை ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கான சட்டபூர்வமான போராட்டமே விடுதலைப் புலிகள் நடத்தி வரும் ஆயுதப் போராட்டமாகும். இப் போராட்டத்தின் வளர்ச்சிதான் இன்று தமிழீழ தேசத்தில் விடுதலைப் புலிகளால் அமைக்கப்பட்டிருக்கும் அரசு நோக்கிய தமிழீழ அரசாகும் (De Facto state of Tamil Eelam). இவ்வரசின் ஒரு அரசாங்கத்தை நோக்கிய அரசாங்கமாக (Defacto Government) விடுதலைப் புலிகள் இன்று இப்போர்ச் சூழ்நிலையில் பல இன்னல்கள் மத்தியில் செயற்பட்டு வருகின்றனர். சந்திரிகா அரசு இந்த உண்மை நிலைமையைச் சிதைத்து தமிழீழத்தை ஒரு அரசில்லாத தேசமாக்கி, பின்னர் ஒரு தேசம் என்றும் இல்லாதாக்கி, தமிழர்கள் சிங்கள பௌத்த தேசத்தில் ஒரு சிறுபான்மையினத்தவர் என்ற இரண்டாம் தர நிலைக்குத் தள்ளி பின் அதுவும் இல்லாத அனாதைகள் ஆக்குவதிலே குறிக்கோளாகஉள்ளது.

இவ்வாறாக சிங்கள பௌத்தத்தின் மேலாண்மையை தமிழர்கள் மீது திணிப்பதற்கு எடுக்கப்படும் ஒரு முயற்சிதான் ஐம்பது வருட கொலை வெறியாட்டத்திற்கான விழாவாகும். இந்நிலையில் சிங்கக் கொடியின் கீழ் தமிழரை ஆளமுயலும் சிங்களத்தின் இறைமையைத் தமிழீழம் ஏற்காது என்பதை உலகுக்கு வெளிக்காட்டவும், புலிக்கொடியின் கீழ் அமைக்கப்பட்டுள்ள அரசு நோக்கிய தமிழீழ அரசிடம் தான் எமது இறைமை உள்ளது என்ற உண்மையை உலகின் காதில் இடித்துரைத்து இத் தமிழீழ அரசிற்கான அங்கீகாரத்தினை உலகிடம் வேண்டவும் இவ் ஊர்வலம் முக்கியமானதாகும்.

இலண்டனில் பெப்பிரவரி 1ம் திகதி திரளும் பத்தாயிரத்திற்குமேற்பட்ட தமிழீழ மக்களின் முன்னிலையில் தமிழீழத் தேசியக் கொடி ஏற்றப்பட்டது என்ற செய்தி உலகின் காதுகளில் பல செய்திகளைக் கூறும். அது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைத்துள்ள அரசாங்கத்தை நோக்கிய அரசாங்கத்திற்கு மக்களின் ஆதரவு இல்லை என்று கூறும் சந்திரிகா அரசின் பிரச்சாரத்தைக் கேலிக் குரியதாக்கும். விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத அமைப்பாகக் காட்டமுயலும் சக்திகளுக்கு உண்மையை இடித்துரைக்கும். குறுகிய நோக்கங்களுக்காக தமிழ் மக்கள் மீது போடப்படும் அழுத்தங்களுக்கு ஒரு பதிலை இவ் ஊர்வலம் கொடுப்பதோடு எமக்கு ஆதரவாக சர்வதேச களத்தில் குரல் கொடுக்கும் வெளிநாட்டு சக்திகளின் குரலுக்கும் வலுச்சேர்க்கும்.

முக்கியமாக பிரித்தானிய இளவரசர் அங்கு விஜயம் செய்வதால் இந்த ஐம்பது வருட பூர்த்தி விழா சர்வதேசகளத்தில் ஒரு பலப்பரீட்சை ஆகின்றது. தமிழீழ தேசத்தின் ஆன்ம பலத்தை உலகிற்குப் புரிய வைக்க வேண்டிய பாரிய பொறுப்பு பெப்பிரவரி 1ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிரித்தானியாவில் புலம் பெயர்ந்து வாழும் அனைத்துத் தமிழீழ மக்களின் கைகளில் தங்கியுள்ளது.

## அவற்றை முகம் கொடுக்க தமிழீழ மக்கள் முன்னெடுக்கும் முயற்சிகளும்


50 ஆண்டு கால
அடக்குமுறையை எதிர்த்து

லண்டனில்
மாபெரும் எழுச்சிப் பேரணி

காலம்:
01 - 02 - 98
ஞாயிறு காலை
11.00 மணிக்கு

இடம்:
Hyde Park
Reformers Tree
✳ (அருகாமையிலுள்ள
Underground நிலையம்
Marble Arch)

சிங்கள தேசம் தனது சுதந்திர பொன்விழாவை கேளிக்கைகளுடன் கொண்டாடவுள்ள வேளையில், சிங்கள அரசுகளின் 50 ஆண்டுகால தமிழினப் படுகொலைகளை, அடக்குமுறைக் கொடூரங்களை அம்பலப்படுத்தவும் எமது தேசியக்கொடியை ஏற்றி தமிழினத்தின் தேசிய சுதந்திர உணர்வுகளை வெளிப்படுத்தவும் பேரணியில் அணி திரள்வோம்.!

எமது தேசம் விடியும் வரை விடுதலைப் பயணத்தை உறுதியுடன் தொடர்வோம்.

UTO. ☎ 0171 - 403 4554

www.tamilarangam.net



# புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் பத்தாவது நினைவு ஆண்டு

## தமிழீழத்தில் நினைவு நிகழ்ச்சிகள்

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நிறுவனருமான புரட்சித் தலைவர் என தமிழக மக்களால் அன்பு செய்யப்பட்டவருமான எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களின் பத்தாவது நினைவுதினம் 24.12.1997இல் இடம்பெற்றது.

எம்.ஜி.ஆர், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் தமிழீழ மக்களுக்கும் ஆற்றிய அளப்பரிய சேவைகளை நினைவுகூர்ந்து தமிழீழ மக்கள் 24, 25, 26ஆம் திகதிகளில் எம்.ஜி.ஆர் நினைவு விழாக்களை எடுத்தனர்.

வன்னிப் பெருநிலப்பரப்பிலும் இவரின் நினைவாக பரந்த அளவில் நினைவு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. ✳

# மக்கள் குடியிருப்புக்களை அழிக்கும் சிறிலங்கா உள்ளூராட்சித் தேர்தல்களை நடாத்தும் விந்தை

யாழ். குடாநாட்டில் மக்கள் உயிர்கள் மட்டும் அழிக்கப் படவில்லை. அவர்களின் வீடுகளும் குண்டு வைத்து தகர்த்தெறியப்படுகின்றன. வடமராட்சி அல்வாயில் மட்டும் ஐந்து வீடுகள் சிறிலங்கா இராணுவத்தினரால் குண்டு வைத்து தகர்க்கப்பட்டுள்ளன.

வீடுகள் மட்டுமல்ல, தமிழ்க் குழுக்களின் சொத்துக்களும் சிறிலங்கா இராணுவத்தால் கொள்ளையடிக்கப்பட்டு கொண்டு செல்லப்படுகின்றன.

### களுத்துறைச் சிறை ....

அத்துடன் சம்பவத்திற்கு பின்னணியில் இருந்திருக்கக்கூடும் எனக் கருதப்படும் சிறைக் காவலர்களே அங்கு தொடர்ந்தும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பது சம்பவங்களை நேரில் கண்ட சாட்சியங்களின் உயிருக்கு ஆபத்தான சூழ்நிலையை உருவாக்கும் எனவும் எச்சரித்துள்ளது. சம்பவங்களை நேரில் கண்டவர்கள் உயிர் பாதுகாப்புக்கு அஞ்சி சாட்சியம் சொல்ல மறுத்தமையையும் மன்னிப்புச் சபை சுட்டிக் காட்டியுள்ளது.

யாழ். குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடாத்தக்கூடிய சுதந்திரநிலை நிலவுவதாக வர்ணிக்கும் சிறிலங்கா அரசு, இக் களுத்துறைச் சம்பவத்தில் இனக்கொலை செய்யப்பட்டவர்களின் சடலங்களை அவர்களின் சொந்த ஊருக்கு எடுத்து செல்வதற்கு மட்டும் அனுமதி மறுத்து, அங்கு பாதுகாப்பில்லை என அறிவித்தமை அனைவரும் அறிந்ததே. மரண நிகழ்வைச் செய்ய பாதுகாப்பு இல்லாத

இடத்தில் தேர்தல் நடாத்த பாதுகாப்பு உண்டெனும் சிறிலங்கா அரசின் முடிவுகள், முன்னுக்குப் பின் முரண்பாடுடையனவாகக் காணப்படுகின்றது. ✳

வட்டுக்கோட்டை, ஈச்சமோட்டை, மூளாப் பகுதிகளில் இந்துக் குருக்களின் வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் மதில்கள், கோவில் உட்கட்டிடங்கள், மூலஸ்தானம் என பல பகுதிகள் சிறிலங்கா இராணுவத்தினரால் சேதமாக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு மக்களின் வாழ்வின் புனித இடங்களான வீடுகள், கோவில்களை எல்லாம் சிதைத்தழிக்கும் சிறிலங்கா அரசுக்கு கூரையின்றி இருக்கும் உள்ளூராட்சிச் சபைகளுக்கு தேர்தல் நடாத்துவதில் மட்டும் ஜனநாயக உணர்வு கரைபுரள்கிறது. இதேவேளை யாழ். குடாநாட்டில் உள்ளூராட்சி தேர்தல் அறிவிப்பு விடுக்கப்பட்டது முதல் சிறிலங்காப் படையினர் மோசமான முறையில் பொதுமக்கள் மீதான இராணுவ சர்வாதிகாரத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

தென்மராட்சி மட்டுவில் பகுதியில் வீதியில் நின்ற 18 வயதுடைய யோகராசா ரமேஸ் என்ற இளைஞரைச் சுட்டுக் கொன்ற சிறிலங்கா படையினர், அவர் ஈ.பி.டி.பியின் சுவரொட்டியைத் கிழித்ததாக உண்மைக்கு மாறான தகவலைக் கொடுத்துள்ளனர். பொதுமக்கள், தேர்தல் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாது எச்சரிப்பதற்காகவே அந்த அப்பாவித் தமிழ் இளைஞனின் உயிரை அழித்த சிங்கள இராணுவத்தினர், இதன் மூலம் மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்த முயல்வதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. பலாலியிலும் ஒரு பொதுமகன் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டதாகத் தெரிகிறது. இதேவேளை வரணியில் 43 வயதான 3 பிள்ளைகளின் தாய் நாகன் ஜெயமணி, அவரது மகன் நாகன் ஜனார்த்தனன் (8) சிங்கள இராணுவத்தினரால் சுடப்பட்டுள்ளனர். இதில் தாய் அவ்விடத்திலேயே மரணமடைந்துள்ளார். சிறுவன் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பொதுமக்களை சுடுவது மட்டுமல்லாது, பொதுமக்கள் மிதான சுற்றிவளைப்புகளும் அதிகரித்துள்ளன. கொக்குவில், கோண்டாவில், புதுக்காடு, தாளையடி போன்ற இடங்கள் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு கடும் தேடுதல்களுக்கு உள்ளானதுடன், பலர் காரணமின்றிக் கைது செய்யப்பட்டு விபரம் அறிய முடியாத இடத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளை, யாழ்ப்பாணம் குருநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைதாக்கப்பட்ட நான்கு பிள்ளைகளின் தந்தையான சிறில் அன்ரன் ஜோர்ஜ், பத்மசீலன் அன்ரன் யூட் ஆகிய இருவரும் காங்கேசன்துறை முகாமில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. நான்கு ஆண்டுகள் சவூதியில் வேலைபார்த்துவிட்டுத் திரும்பிய ஜெயராஜ் முகுந்தன் எனும் பொதுமகனும் சிறிலங்கா இராணுவத்தினரால் காரணமின்றிக் கைது செய்யப்பட்டுள்ளார்.

தேர்தல் அறிவிப்பு ஒரு பக்கம் இருக்க, யாழ். குடாநாட்டில் ஜனநாயக உரிமைகளுக்கு சிறிலங்கா உயிரூட்டுவது போன்ற மாயையை ஏற்படுத்தும் அதேவேளை, மயிலிட்டி, தெல்லிப்பளை, காங்கேசன்துறைப் பகுதிகளில் தமது வீடுகளுக்கு குடியிருக்கவெனச் சென்ற 693 குடும்பங்கள் அவர்கள் வீடுகளுக்குச் செல்லாதவாறு சிறிலங்கா இரா ணுவத்தினரால் தடுக்கப்பட் டுள்ளனர். 13 அகதி முகாம்களில் வலுக்கட்டாயமாக தள்ளப்பட்டுள்ள இந்தக் குடும்பங்களின் நடமாடும் சுதந்திரம் உட்பட நாளாந்த வாழ்வு முழுவதும் மறுக்கப்பட்டுள்ளது.

இப்படியான ஒரு சூழலில் தான் சிறிலங்கா உள்ளூராட்சி தேர்தல் எனும் நாடகத்தை ஆடுகிறது. ✳

# ஆயுதமுனையில் அரசியல்.....

ஒடுக்குவதற்கான சர்வதேச பரப்புரைச் சாதனமாக மாற்ற சிறிலங்கா அரசு எல்லாவிதமான ஆயத்தங்களையும் செய்து வருகிறது.

இதன் பின்னணியில் தமிழ் மக்களும் இந்தப் பொன் விழாவைத் தேசிய விழாவாக கொண்டாடுகின்றனர் எனக் காட்டுவதற்கான உத்தியாக, சிறிலங்கா தேசக் கொடியினை தமிழ் மக்கள் வீடுகளில் பறக்கவிட வேண்டுமென இராணுவ அழுத்தங்களை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. சிறிலங்காவின் இத்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு ஆயுதமுனையில் தமிழ் மக்களின் அரசியல் பணிவைப் பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி படையினர் பணிக்கப்பட்டுள்ளனர்.

இதற்காக, மக்களிடம் திணிப்பதற்கென ஐயாயிரம் சிங்களத் தேசக் கொடிகள் யாழ்ப்பாணத்தில் புதிதாக திறக்கப்பட்ட 'சலுசல' விற்பனை நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தமிழீழ மக்கள் தமது இரத்தத்தாலும் உயிர்த் தியாகங்களினாலும் உருவாக்கிய தமிழீழத் தேசக் கொடியினை ஏற்றி தமது தாயகத்தை வணங்கி வந்தனர். இதனை மாற்றியமைத்து அவர்களது வீடுகளில் அவர்களை அழித்தொழித்து சுதந்திரமாக வாழ விடாது தடுக்கும் அந்நிய அரசான சிறிலங்கா அரசின் கொடிகளைப் பறக்கவிடுமாறு இராணுவ சர்வாதிகாரம் யாழ். குடாநாட்டில் கட்டவிழ்த்து விடப்பட்டு வருகிறது.

இதேவேளை, இராணுவச் சர்வாதிகாரத்துக்கு எதிரான மக்கள் போராட்டமும் யாழ். குடாநாட்டில் வலுப்பெற்று வருகிறது. 24ஆம் திகதி கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து ஒன்றரை கிலோ மீற்றர் தூரத்தில் காலை வேளை இராணுவ அணி ஒன்றுடன் விடுதலைப் புலிகள் நேரடி மோதலில் ஈடுபட்டனர். இதில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். நான்கு விடுதலைப் புலி வீரர்களும் வீரச்சாவெய்தினர். இச் சண்டை ஆறு மணித்தியாலங்களுக்கு நீடித்துள்ளது. இதற்கு முதல் நாள் தென்மராட்சி உசன் பகுதியில் இராணுவத்தினர் சென்ற வாகனம் ஒன்று கண்ணிவெடித் தாக்குதலுக்கு இலக்காகி ஒரு அதிகாரி உட்பட 4 இராணுவத்தினர் பலியாகி உள்ளனர். நத்தார் தினத்தன்று கைதடி நுணாவில் சந்தியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே ஏற்பட்ட சண்டையில் கடும் மோதல் நடைபெற்றுள்ளது. சண்டையின் பின்னர் சிறிலங்கா இராணுவம் கண்மூடித்தனமாகச் சுட்டதில் ஓர் பொதுமகன் படுகாயமடைந்துள்ளார். மேலும் 26ஆம் திகதியன்றும் சாவகச்சேரிச் பகுதியில் மோதல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு தமிழீ மக்களின் இராணுவச் சர்வாதிகாரத்திற்கெதிரான தாக்குதல்கள் வலுப்பெற்று வருவது சிறிலங்காவின் உள்ளூராட்சி சபை தேர்தல் அறிவிப்பின் போலித் தன்மையை வெளிப்படுத்துகிறது. அதேவேளை, இந்த உள்ளூராட்சி தேர்தல் அறிவிப்பால் யாழ். குடாநாட்டு மக்கள் பலத்த அச்சம் அடைந்துள்ளனர்.

இராணுவம் வலுக் கட்டாயப்படுத்தி தமது அரசியல் பணிவைப் பெற முயற்சிக்கும் என்பதும் அந்த ஆயுத அடக்குமுறைக்கு பணிவது என்பது தமது தேசத்திற்கு

இழைக்கும் துரோகமாக மாறிவிடலாம் என்பதுமே அவர்கள் அச்சமாக உள்ளது. ✳

# பெப்ரவரி நாலுக்குள் பாதை திறக்க .........

எதுவித பயனுமே இல்லாது ஒரே இடத்தையே சுற்றி சுற்றி வருவதும் ஆயுதங்களையும் சிங்கள இளைஞர்களையும் இழப்பதையுமே பலனாகப் பெற்ற சிங்கள இராணுவ அதிகாரிகள், தமது இயலாமையை வெளியிட முடியாமல், இயற்கையின் மீது பழியைப் போட்டு எப்படியாவது சிறிதுகால ஓய்வைப் பெற முயன்றதாகவே செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில், ரத்வத்தவின் உத்தரவை அடுத்து, 'ஜெயசிக்குறுய்' முன்னரங்கப் பகுதிக்கு இராணுவத்தினரும் ஆயுதத் தளபாடங்களும் பெருமளவில் குவிக்கப்படுவது மீண்டும் ஆரம்பமாகி உள்ளது.

இந்த முயற்சி கைகூடாது என சிங்கள அரசியல்வாதிகளே கருதுகின்றனர். இதற்கு சிறந்த உதாரணமாக, கேகாலை சிறிலங்கா பாராளுமன்ற உறுப்பினர், "அமைச்சர் ரத்வத்த பெப்ரவரி 4ஆம் திகதிக்கு முன்னதாக கிளிநொச்சியை அடைவது பிரதான பாதை ஊடாகவா அல்லது காடுகளுக்குள் ஒளிந்து சென்றா" எனக் கிண்டல் செய்துள்ளார்.

இதேவேளை, வன்னி மீது டிசெம்பர் 23ஆம் திகதி இரு கிபீர் போர் விமானங்கள் குண்டு வீசி மாங்குளம் பகுதியைத் தாக்கியுள்ளன. பொதுமக்களின் குடியிருப்புப் பகுதிகளை இலக்கு வைத்தே இத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

சிறிலங்காவின் நடவடிக்கைகளை அவதானித்து வரும் விடுதலைப் புலிகள் எந்த நிலைமையையும் சந்திப்பதற்குத் தயாராக உள்ளனர். பெரும்பாலும் மீண்டும் புதிய போருடனேயே சிறிலங்கா

1998ஆம் ஆண்டை ஆரம்பிக்குமென ஆய்வாளர்கள் எதிர்பார்க்கின்றனர். ✳

www.tamilarangam.net



# ஆண்டுகளும்- 'ஆமி' இழப்புகளும்

***தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இராணுவ நிலைவரம் பற்றிய ஒரு வெளிச்சத்தை இக்கட்டுரை தருகின்றது. சுமார் 25 ஆண்டுகால ஆயுதப் போரில், படைத்தரப்பின் ஆள் இழப்பு விபரத்தை, ஆண்டுவாரியாக இது வழங்குகின்றது. சிங்கள அரசாங்கம் கூற விரும்புவதுபோல, போர் ஒரு இறுதிக்கட்டத்திற்கு வந்துகொண்டிருக்கவில்லை. அதற்குப்பதிலாக, போர் விரிவாக்கம் கண்டுவருகின்றது என்ற இராணுவ யதார்த்தத்தையும் இக்கட்டுரை விளக்குகின்றது. படைத்தரப்பின் ஆள் இழப்பும் –படைச் செலவீனமும் – படைக்கல இழப்பும் ஏறுமுகமாக – படுவேகமாக – அதிகரித்துச் செல்கின்றது என்ற உண்மையை இதில் கண்டுகொள்ளலாம்.***

அதிலும் கடந்த இரண்டு வருடப் போரில் (95–97) படைத்தரப்பு சந்தித்த ஆள் இழப்பின் மொத்தத் தொகையானது, அதற்கு முன் நடந்த சுமார் 22 வருடப் போரில் (72–94) ஏற்பட்ட படைத்தரப்பு இழப்பைவிட அதிகம் என்ற உண்மையை (அட்டவணை–1) காட்டுகின்றது. 'மூன்றாம் ஈழப்போர்' என்று இராணுவ விமர்சகர்களால் அடையாளப்படுத்தப்படும் இந்தக் காலப் பகுதியிலே போர் பெருமெடுப்பில் விரிவாக்கம் கண்டு வருகின்றது. இந்தக் காலப்பகுதியில், தமிழர் தாயகத்தின் முக்கிய சில பட்டணங்களை சிங்களப் படைகள் கைப்பற்றியுள்ளன. இந்த நில ஆக்கிரமிப்பு அம்சத்தை போரின் வெற்றியாக சிங்களம் கருதுகின்றது. எனினும் இது, வெற்றி பற்றிய தவறான இராணுவ மதிப்பீடு என்ற உண்மையை கண்டுணரும் காலம் வெகுதூரத்தில் இல்லை.

தரப்பட்ட கோட்டு வரைப்படத்தின்படி (Graph) இராணுவ இழப்புக்களைப் பொறுத்தளவில்– ஒரு சில ஆண்டுகள் இறங்குமுகமாகத் தென்படுவதைக் காணமுடியும். குறிப்பாக 91ஆம் ஆண்டும், 94ஆம் ஆண்டும் படைத்தரப்பில் ஆள் இழப்பு குறைவாக ஏற்பட்ட ஆண்டுகளாக வரைபடம் காட்டுகின்றது.

91இல் புலிகள் நடாத்திய 'ஆ. க. வெ' சமரின்போதும் அதைத் தொடர்ந்து அரசபடைகள் நடாத்திய 'மின்னல்' இராணுவ நடவடிக்கையின் போதும் புலிகள் தரப்பில் கணிசமான உயிர் இழப்பு ஏற்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. இதனால், அணிகளின் மீள் ஒழுங்குபடுத்துகையிலும் புதியமுறைச் சண்டைப் பயிற்சிகளிலும் அதற்கான தந்திரோபாயத் திட்டமிடல்களிலும் காலம் செலவழிந்ததனால், அந்த ஆண்டில் புலிகள் இயக்கத்தின் தாக்குதல் நடவடிக்கைகளிலும் ஒரு மந்த நிலை இருந்தன. இதனால், படைத்தரப்பிலும் அதிகளவு ஆள் இழப்புக்கள் ஏற்பட வில்லை.

1994ஐப் பொறுத்தளவில், சிங்கள தேசத்தில் எழுந்த சமாதானச் சலசலப்புகளால் போர் நிலவரம் ஒரு கட்டுக்குள் இருந்தது. சிங்கள தேசத்தின் தேர்தல் ஆண்டாக அது இருந்தது. சந்திரிகா அம்மையாரின் சமாதான கோசங்களும் – தேர்தலில் அவர் வெற்றி பெற்றபின் – புலிகளுக்கும், சந்திரிகா அரசாங்கத்திற்குமிடையே நடந்த சமாதானத் தூதுகள் – மற்றும் போர் ஓய்வு காரணமாகவும் குறைந்தளவு படையிழப்பைக் கொண்ட ஆண்டாக 1994 அமைந்திருந்தது.

எனினும் 95ஆம் ஆண்டு இராணுவ இழப்பானது ஒரு உயர் நிலைக்குச் சென்றது. அப்போதிருந்து, ஆண்டு தோறும் அது வளர்ந்து செல்வதையும் வரைபடம் காட்டுகின்றது.

95ஆம் ஆண்டில் – போர் ஓய்வு காரணமாக எட்டு மாதங்கள் மட்டுமே சண்டை நடந்தது.

எனினும் அந்த எட்டு மாதங்களிலும் சுமார் 1700 படையினர் பலியாகியிருந்தனர். எனினும், 96ஆம் ஆண்டு 2600 ற்கும் அதிகமான படையினர் பலியாகியிருந்தனர்.

## பலியான படையினர்

| | | |
|---|---|---|
| ஈழப்போர் | I | 797 |
| ஈழப்போர் ( 4 1/2 வருடங்கள்) | II (ஏறக்குறைய) | 5500 |
| ஈழப்போர் (இதுவரை 2 வருடம் , 4 மாதங்கள்) | III (ஏறக்குறைய) | 6500 |

அட்டவணை - 1

"மூன்றாம் ஈழப்போர்" என்று இராணுவ விமர்சகர்களால் அடையாளப்படுத்தப்படும் இந்தக் காலப் பகுதியிலே போர் பெருமெடுப்பில் விரிவாக்கம் கண்டு வருகின்றது. இந்தக் காலப்பகுதியில், தமிழர் தாயகத்தின் முக்கிய சில பட்டணங்களை சிங்களப் படைகள் கைப்பற்றியுள்ளன. இந்த நில ஆக்கிரமிப்பு அம்சத்தை போரின் வெற்றியாக சிங்களம் கருதுகின்றது. எனினும் இது, வெற்றி பற்றிய தவறான இராணுவ மதிப்பீடு என்ற உண்மையை கண்டுணரும் காலம் வெகுதூரத்தில் இல்லை.

இந்த ஆண்டில் (97) எட்டு மாதம்வரை, 2200ற்கும் மேற்பட்ட படையினர் பலியாகி, அது மேலும், அதிகரித்துச் செல்லும் போக்கையே காணமுடிகின்றது. அதாவது, படைத்தரப்பின் ஆள் இழப்பு எல்லைமீறி உயர்ந்து செல்கின்றது.

இப்போது, போர் உயர்ந்த கட்டத்திற்கு சென்றுள்ளது. சிங்கள அரசாங்கத்தின் நில ஆக்கிரமிப்பு ஆசை பலத்த பலப்பரீட்சைக்கு உள்ளாகிவிட்டது. முன்னோக்கி நகர்வதற்கு படைகள் மிகவும் சிரமப்படுவதும் ஒவ்வொரு அங்குல நகர்விற்காகவும் பெருந்தொகை ஆட்களை இழப்பதும் – டாங்கிகள் உட்பட பாரிய மரபுப்போர்க் கலங்களை இழப்பதும் – இப்போது அதிகரித்தபடி செல்கின்றது.

இரண்டாம் ஈழப்போரின்போது (90 – 94) 15 கடற்கலங்களையும் 8 வான் கலங்களையும் சுமார் 5500 படையினரையும் சிங்களப் படை இழந்திருந்தது. இதேவேளை, இரண்டு வருடமும் நான்கு மாதமுமே நிறைவடைந்துள்ள மூன்றாவது ஈழப்போரில் இதுவரை சிங்களப்படை 17 விமானங்களையும், 12 கடற்கலங்களையும், 6500ற்கும் மேற்பட்ட படையினரையும் இழந்துள்ளது. இதேவேளை, சக்தி வாய்ந்த மரபுப்போர் ஆயுதங்களில் 20 டாங்கிகளையும் 15 ஆட்டில்லறிகளையும் அது இழந்துள்ளது.


இதேவேளை, முதலாம் ஈழப்போர் காலத்தில் சிங்கள அரசாங்கங்கள் தமது பாதுகாப்புச் செலவீனமாக நாளொன்றுக்கு 5 இலட்சம் ரூபாய்களை செல விட்டிருந்தன. இரண்டாம் ஈழப்போர் காலத்தில் இது நாளொன்றுக்கு 5 கோடி ரூபாவாக உயர்ந்தது. மூன்றாம் ஈழப்போர் காலத்தில் இது இன்று, நாளொன்றுக்கு 14 கோடி ரூபாவாக அதிகரித்துள்ளது.

## பொருளாதாரச் செலவு

| ஆண்டு | கோடி |
|---|---|
| 1983 | 184 |
| 1984 | 250 |
| 1985 | 400 |
| 1986 | 500 |
| 1987 }<br>1988 }<br>1989 } | 600 |
| 1990 | 1000 |
| 1991 | 1500 |
| 1992 | 1800 |
| 1993 | 2000 |
| 1994 | 2500 |
| 1995 | 3100 |
| 1996 | 4800 |
| 1997 | 5200 |

சிங்களப் படைக்குச் சார்பான வகையிலேயே போர் செல்கின்றது என்ற அரச தரப்புவாதம், வெறும் மாயை என்றே மேற்குறித்த களத்தரவுகள் எடுத்துக் காட்டுகின்றன.

அத்துடன், புலிகள் பெற்றுவரும் மரபுப் போர்ப் பலத்தையும் – ஆட்தொகை அதிகரிப்பையும் – சண்டைத்திறன் வளர்ச்சியையும் கோட்டு வரைபடமாக்கிப் பார்த்தால், அதைப் பார்க்கும் சிங்களத் தளபதிகள் அதிர்ச்சியடைவார்கள். ✳



www.tamilarangam.net



# தாயகம் நோக்கிய பயணம்

## லியோன் யூறிஸ்

## முதலாம் பாகம்

### அத்தியாயம் பதினெட்டு

(தொடர்ச்சி)

அவர் தனக்கு வேண்டிய பெலசாலிகளான முந்நூறு பிள்ளைகளைக் கவனமாகத் தெரிந்து எடுத்து அவர்களைக் குழுக்களாக விளையாட்டு மைதானத்திற்கு அழை த்துச் சென்று, கத்திகளாலும் தடிகளாலும் சண்டையிடவும், சிறிய ரக ஆயுதங்களைக் கையாளவும், கைக்குண்டுகளை வீசவும் பயிற்சி அளித்தான். பிரிட்டிஷ் சிப்பாய்கள் வருகிறார்களா என்பதைக் கண்காணிக்க ஆட்கள் விளையாட்டு மைதானத்தைச் சுற்றிலும் நிறுத்தப்பட்டார்கள். அவர்களிடம் இருந்து கிடைக்கும் சைகைகள் போர் விளையாட்டுக்களை சமாதான கால விளையாட்டுக்களாக மாற்றிவிடும். மூன்று வினாடிகளில், குழுவாகச் சண்டையிட்டுக் கொண்டிருப்பவர்கள், பாடசாலைப் பாடல்களைக் குழுவாகப் பாடும் குழுக்களாக மாறக் கூடியவர்களாயினர். விளையாட்டு மைதானத்தில் பயிற்சி இல்லாதவர்கள் வகுப்பறைகளில் பலஸ்தீனத்தின் இடங்களைப் பற்றியும், பிரிட்டிஷ் உளவுத்துறையின் கேள்விகளைப் போன்ற கேள்விகளுக்குப் பதில் அளிக்க வேண்டியது எப்படி என்றும் அறிந்து கொண்டிருந்தார்கள்.

இரவு வேளைகளில் செவ் அவர்களை விளையாட்டு மைதானத்துக்கு அழைத்துச் செல்வான். அங்கே, கனன்று எரியும் நெருப்பைச் சுற்றி அமர்ந்தபடி, பலஸ்தீனம் சென்றால் அவர்களுக்காகக் காத்திருக்கும் அற்புதமான சுதந்திர வாழ்வு பற்றியும், முட்கம்பி வேலிகட்குப் பின்னால் திரும்பவும் சீவிக்க வேண்டிய அவசியம் இருக்காதது பற்றியும் பால்மாக்குகள் கூறும் கதைகளுக்கு செவிமடுப்பார்கள்.

கிடியோன் திட்டத்தின் இன்னொரு பிரச்சினை, அரியின் நெருங்கிய உதவியாளர்களான டேவிட், ஜோஆப், செவ் ஆகியோருக்கிடையில் உருவாகியது. டேவிட் ஒரு உணர்வு பூர்வமானவனாகவும் கல்வி கற்றவனாகவும் இருந்தாலும் உணர்ச்சிகள் பொங்கும்போது, அவன் எவருக்குமே பயப்படமாட்டான். அவன் உணர்ச்சிகள் இப்போது பொங்கிக் கொண்டிருந்தன. பிரிட்டிஷ் களஞ்சியத்துள் சென்று வந்த முதல் வெற்றியானது, அதனுள் ஒரு சப்பாத்து நூலைக் கூட, மிச்சம் விடாமல் எடுக்க வேண்டும் என்ற மனோ நிலையை உருவாக்கியது. தொடர்ச்சியாக "23வது போக்குவரத்துப் பிரிவின் ட்ரக்குகளைக் களஞ்சியத்துள் கொண்டு போய், ஆணி அறைந்து நிலை நிறுத்தியிருக்காத எதனையும் எடுத்து வர அவன் விரும்பினான். செவ், பீரங்கிகளை எடுக்கக்கூட எண்ணினான். குறைந்தளவு பொருட்களோடு நீண்ட காலத்தைச் செலவழித்த அவர்கட்கு அதிஷ்டவசமாகக் கிடைத்த இந்த வாய்ப்பு பெரும் கவர்ச்சி மையமாக இருந்தது.

பேராசை முழுத்திட்டத்தையுமே பாழடித்து விடும் என அரி வாதிட்டான். பிரிட்டிஷார் சிறிது தூங்கிக் கொண்டிருக்கலாம், ஆனால் முற்றாகக் கவனிக்காமல் இருக்கமாட்டார்கள். இயற்கையாக இருப்பதற்காக ஓரிரு முறை 23-வது பிரிவின் ட்ரக்குகள் போய் வரலாம். முற்றாகக் களஞ்சியத்தை வடித்தெடுக்க நினைப்பது எல்லோரையும் மாட்டிவிடும் அலுவலாகும் என அவன் வாதிட்டான்.

ஆயினும் அவர்களைத் தடுக்க முடியவில்லை. அவர்கள் மேலும், மேலும் துணிகரமான செயல்களில் இறங்கினார்கள். உச்சக்கட்டமாக ஜோஆப் சில பிரிட்டிஷ் அதிகாரிகளை மதிய உணவுக்காக 23-வது பிரிவுக்கு அழைக்கவும் செய்தான். அரியுடைய பொறுமை சிதறி, அவர்களைத் திருத்த எல்லோரையும், பலஸ்தீனம் அனுப்பப் போவதாக மிரட்டினான்.

கிடியோன் திட்டம் ஆரம்பமாகி இரு வாரங்களுக்குப் பிறகு, எல்லாம் ஆயத்தமாகி விட்டன. இறுதிக்கட்டமாக மார்க் பாக்கரின், பத்திரிகை அறிக்கையும், முந்நூறு பிள்ளைகளைக் கைரேனியாவுக்குக் கொண்டு வருதலும், பிரிட்டிஷாரின் அடுத்த நடவடிக்கையை எதிர்நோக்கிக் காத்திருந்தது. திட்டத்தின் இறுதிக் கட்டம் லார்நாகா வீதியில், புதிய அகதிகள் முகாம்களைத் திறந்து கராஒலொஸ்ஸில் இருந்து அகதிகளை இடம் மாற்றத் தொடங்கியதும் ஆரம்பமாகும்.

> **கடந்த நூற்றாண்டில் குறிப்பாக ரஷ்யா, போலந்து போன்ற நாடுகளில் யூதப்படுகொலைகள் அதிகரித்து இடம் பெற்றன. அதையடுத்து தாய்நாடு திரும்பும் உத்வேகம் நாடுகடந்த யூதர்களிடையே ஏற்பட்டது. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது கிட்லரின் நாஸி யேர்மனியில் 60 இலட்சம் யூதர்கள் கொல்லப்பட்டனர். இதையடுத்து 'தாயகம் நோக்கிய பயணம்' யூதர்களின் தாரக மந்திரமாகியது.**

### அத்தியாயம் பத்தொன்பது

சுதர்லாண்டின் உதவியாளராக கால்ட்வெல் சைப்பிரசு பற்றிய தகவல் சேகரிப்பு ஆய்வுப் பிரிவின் தலைவரான மேஜர் அலன் அலிஸ்ரரின் (Allan Alister ) காரியாலயத்துள் சென்றார். கூச்ச சுபாவம் உள்ளவரைப் போல் தோற்றமுள்ளவரும் மென்மையாக உரையாடும் இயல்புள்ளவருமான 40 வயது அலிஸ்ரர் தமது மேசைமேல் இருந்த ஒரு கூட்டு ஆவணங்களை எடுத்துக்கொண்டு கால்ட்வெல்லைத் தொடர்ந்து சுதர்லண்டின் காரியாலயத்துள் சென்றார்.



பிரிகேடியர் கால்ட்வெல்லையும், அலிஸ்ரரையும் அமரச் சொல்லி விட்டு தகவல் சேகரிப்பு ஆய்வுப் பிரிவுத் தலைவரைத் தொடங்கலாம் எனத் தலையை அசைத்தார். அலிஸ்ரர் தனது மூக்கை ஒருமுறை சொறிந்து விட்டு, தனது ஆவணங்களைப் பார்வையிட்டார். "கராஒலொஸ்ஸின், பிள்ளைகள் பிரிவின் அதீதமான யூத செயற்பாடுகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. நாங்கள் இவற்றை ஒரு பெரிய குழப்பம் செய்வதற்கு அல்லது தப்பியோடுவதற்கான ஆயத்தம் என ஆராய்ந்து முடிவு செய்துள்ளோம்." அரைகுறை கிசுகிசுக்கும் குரலில் சொன்னார்.

சுதர்லாண்ட் பொறுமையில்லாமல் தமது மேசை மேல் விரல்களால் தாளமிட்டார். அலுஸ்ரர் எப்போதுமே தனது மென்மையான கிசுகிசுப்பான முறையில் விஷயங்களைச் சொல்லும் விதத்தில் அவரை அடிக்கடி கலவரத்தில் ஆழ்த்தி வந்தார். இப்போதும் அப்படியே மேலும் பல பக்கங்களை வழமையான பாணியில் வாசித்துக் கொண்டிருந்தார்.

அவர் வாசித்து முடிந்ததும் சுதர்லாண்ட் அவரைப் பார்த்து, என் அன்புக்குரிய மேஜர் அலிஸ்ரர், நீங்கள் கடந்த 15 நிமிடங்களாக வாசித்தவைகளின் சாராம்சம், யூதர்களினால் ஏதோ பயங்கரத்திட்டம் ஒன்று தீட்டப்படுவதாக நீங்கள் சந்தேகிக்கிறீர்கள் என்பதுதான். கடந்த இருவாரங்களாக பிள்ளைகள் பிரிவினுள் எமது ஆட்கள் இருவரையும், கராஒலெஸ்ஸில் வேறு இடங்களின் ஐந்து பேரையும் நீங்கள் ஊடுருவல் செய்ய முயற்சி செய்தீர்கள். உங்களின் மகாசிறந்த ஒற்றர்கள் ஒரு மணி நேரத்திற்குள்ளேயே கண்டுபிடிக்கப்பட்டு, யூதர்களால் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். இரு பக்கங்கள் நிறைய உங்களால் இடைமறித்துப் பெறப்பட்டும், உங்களால் அர்த்தப்படுத்திக்கொள்ள முடியாத செய்திகளை வாசித்தீர்கள். இவை உங்களால் கண்டுபிடிக்க முடியாத ஒலி பரப்புக் கருவியொன்றிலிருந்து அனுப்பப்படுவதாகவும் கூறுகிறீர்கள்."

கால்ட்வெல்லும் அலிஸ்ரரும் "கிழவன் இன்றைக்கும் பிரச்சினை தரப் போகிறான்" என்பது போல் ஒருவரை ஒருவர் வேகமாகப் பார்த்துக் கொண்டனர்.

"பிரிகேடியர் குறை எண்ண வேண்டாம்" முன்னுக்குச் சரிந்து கூறிய அலிஸ்ரர், தொடர்ந்தார். எமக்குக் கிடைக்கும் தகவல்கள் பொரும்பாலும் ஊகம்தான். ஆயினும் திட்டமாகக் கிடைத்த செய்திகள் மீது கூட நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. இந்த முகாம், பலஸ்தீனிய பால்மாக்குகளால் நிறைந்திருக்கிறதென்று, எங்களுக்கு நிச்சயமாகவே தெரியும். இவர்கள் இங்கு இரவில், விளையாட்டு மைதானத்தில் இராணுவப்பயிற்சி கொடுக்கிறார்கள். சலாமிஸ் இடிபாடுகள் அருகே ஓரிடத்தில்தான் தங்கள் ஆட்களைச் சைபிரசுக்குள் கடத்துகிறார்கள் என்பதும் தெரியும். இந்தக் கிரேக்கனான மண்ட்றியா இவர்களுடன் இணைந்து வேலை செய்கிறான் என்று நினைக்கப் போதிய காரணங்கள் உண்டு.

"அதைவிடு.......... இதெல்லாம் எனக்குத் தெரியும். அந்தப் பலஸ்தீனியர்கள் அங்கு இருப்பதால்தான் இந்த அகதிகள் அமைதியாக இருக்கிறார்கள். அவர்கள் அங்கு பாடசாலைகள், வைத்திய சாலைகள், சமையல் அறைகள் வேறு பலவற்றையும் நடத்துகிறார்கள். எல்லாவற்றையும் விட, அவர்கள் அங்கு குறிப்பிட்ட சில ஆட்களை மட்டும் வெளியே போய் வர அனுமதிப்பதன் மூலம் தப்பியோடுதலைத் தவிர்த்து ஒரு ஒழுங்கமைப்பைப் பேணி வருகிறார்கள். அவர்களை வெளியே விரட்டி விட்டால் நாம் பிரச்சினையைக் கேட்டுப் பெற்றுக் கொண்டது போலாகிவிடும்"

"அப்படியானால் சில தகவல்கள் கொடுப்போரைக் கூலிக்குப் பெற வேண்டும். அப்போதாவது அவர்கள் என்ன திட்டமிடுகிறார்கள் என்று எங்களுக்குத் தெரியும்" என்றார் கால்ட்வெல்.

"இல்லை, யூதர்களைக் கூலிக்குப் பெற முடியாது. அவர்கள் ஈக்களைப் போல் ஒருமித்திருக்கிறார்கள். எப்போதாவது அப்படி ஒருவனைப் பெற்று விட்டோம் என்று நினைக்கும்போது, அவன் எப்போதுமே எங்களைப் பிழையான திசையில் செலுத்தி விடுகிறான்."

"அப்படியானால் இவர்கள் மேல் கடுமையாக நடந்து கொள்வோம். இவர்களுக்குப் பயத்தை ஊட்டுவோம்." வெடித்தார் கால்ட்வெல்.

"பிறெடி..........பிறெடி.........பிறெடி............."ஏமாற்றமான தொனியில் கூறிக்கொணடே தனது சுங்கானைப் பற்ற வைத்துக் கொண்டார் சுதர்லாண்ட். பின்பு, "இவர்களைப் பயப்பிட வைக்கக் கூடிய எதையும் எம்மால் செய்ய முடியாது.

தொடரும்...

www.tamilarangam.net



# சிறுகதை

மார்கழி மாதக் கடுங்குளிர் காற்று உடலை வருடிச் செல்ல, பலமான சிந்தனையுடன் அமர்ந்திருந்தான் சதீஸ். அவன் கிளிநொச்சி பாடசாலை ஒன்றின் உயர்தர வகுப்பு மாணவன். கிளிநொச்சியை இராணுவம் ஆக்கிரமித்த பின்பு படிப்புக்கள், நாளாந்த நடைமுறை வாழ்க்கை எல்லாம் குழம்பி அவனை மிகவும் பாதித்திருந்தது.

முல்லை மாவட்டத்தின் எல்லைக் கிராமமான ஒதிய மலையை சொந்த இடமாகக் கொண்ட சதீசின் குடும்பம் பரம்பரை விவசாயக் குடும்பமாகும். சிங்கள நில ஆக்கிரமிப்பால் இடம்பெயர்ந்து தண்டுவானில் இன்று சதீசின் குடும்பம்.

படிப்புக்காகக் கிளிநொச்சிக்குச் சென்றவன் கிளிநொச்சியை இராணுவம் ஆக்கிரமிக்க தனது வீடான தண்டு வானுக்கு வந்திருந்தான். அன்று மாலை அவன் வெளியே புறப்பட, "தம்பி எங்க வெளிக்கிட்டா" என்ற தாய் கனகத்தை நோக்கி, "நான் இதில வரன் வீட்ட போட்டு வாறன்" என்றவன், சைக்கிளை தனது நண்பன் வீட்டை நோக்கி மிதித்தான்.

இப்போது தண்டுவான் பெரிய மாற்றம் அடைந்திருப்பதை செல்லும் வழியில் அவதானிக்கத் தவறவில்லை. காடுகளாக இருந்த இடங்கள் எல்லாம் வெட்டித் துப்பரவு செய்யப்பட்டு வரிசை வரிசையான சிறிய வீடுகளும், சிறிய கடைகளும் இருப்பதைப் பார்த்ததும் தனக்குள், "யாழ்ப்பாணத்துச் சனம் இடம்பெயர்ந்தது ஒரு வகையில வன்னிச் சனத்துக்கு நல்லதுதான்" என நினைத்துக்கொண்டு கிரவல் வீதி வழியாகச் சென்று கொண்டிருந்தவன், சிறிய ஒழுங்கையில் சைக்கிளைத் திருப்பினான்.

எதிரே நண்பன் வருவதைக் கண்ட சதீஸ், "கும்பிடப்போன தெய்வம் குறுக்க வந்த மாதிரி வாறாய், எங்கை வெளிக்கிட்டிட்டாய்?" என்றவனுக்கு, "நான்ராப்பா இதில எங்கட பள்ளிக்கூடத்தில இடம்பெயர்ந்த சனம் வந்திருக்குதுகள்: அதுகளைப் பராமரிக்கிறதில நிக்கிறன். நீயும் வாவன், போட்டு வருவம்" என்றவனுக்கு, "மச்சான் எனக்கு வீட்டில சரியான வேலை இருக்கு" என்று சொல்லி இழுத்தான்.

"அப்ப என்ர வீட்டை போய், அம்மாவுடன் கதைச்சுக்கொண்டிரு. நான் பள்ளிக்கூடத்திற்குப் போட்டு வாறன்" என்று சொன்னவன் சைக்கிளை பாடசாலையை நோக்கி மிதித்தான்.

"வரனுக்கு இருக்கிற முற்போக்கான சிந்தனை ஏன் எனக்கு வரையில்லை" எனத் தனக்குள் நினைத்துக்கொண்டு வரனின் வீட்டை நோக்கி விரைந்தான்.

வரனின் குடும்பமும் இவர்களுடன் ஒதியமலையில் இருந்தது. இப்போது தண்டுவானில் இருக்கிறார்கள். வரனின் தங்கை ஒதியமலைப் படுகொலையில் இறக்க, இரண்டு பிள்ளைகளுடன் தாய் தண்டுவானில் குடியேற, "இந்தியன்" பிரச்சினையில் வரனின் தமையன் இயக்கத்தில் இணைந்து மாவீரர் ஆக வரனும் தாயுமே இன்று உள்ளார்கள். வரன் தாய்க்குச் செல்லப் பிள்ளை. படிப்பிலும், விளையாட்டிலும் கெட்டிக்காரன். சதீசின் வகுப்பே வரனும் படிக்கிறான். வரன் வீட்டையடைந்த சதீசை, "தம்பி எப்போ கிளிநொச்சியால வந்தனி: இஞ்ச உன்ர கொம்மா பட்டபாடு. ஆமியும் கிளிநொச்சியில மூபண்ண....... இப்படி இருமொனை நான் தேத்தண்ணி ஆத்திக்கொண்டு வாறன்" என்று கூறிக்கொண்டே குசினிக்குள் நுழைந்தாள் வரனின் தாய் செல்வம்.

மண்டபத்தில் இருந்தபடியே வரனின் தமையனின் படத்தைப் பார்த்தான். தங்களுக்கு சிறுவயதில் பாடம் சொல்லித் தரும் குகன் அண்ணாவை ஒருகணம் மனதில் நிறுத்திக்கொள்ள, "தம்பி கிளிநொச்சிப்பாடு என்னமாதிரி" என தேனீர்க் கிண்ணத்துடன் வந்த செல்லம் கேட்டாள்.

"பிறகென்ன, முல்லைத்தீவுத் தோல்வியை மறைக்க ஆமி ஆனைமிறவில இருந்து மூபண்ணுறான்: சனந்தான் மாங்குளம் வரையும் இரண்டு பக்கக் காடுகளிலயும் றோட்டிலயும் தண்ணி சாப்பாடில்லாமல் கிடக்குதுகள். மல்லாவிப் பக்கமும் ஸ்கந்தபுரப் பக்கமும் பெரு வாரியாப் போகுதுகள். செல்லடியாலதான் சனம் சாகுதுகள். அதுதான் நானும் வந்திட்டன்" என்றான்.

"தம்பி உவன் வரனில சரியான வித்தியாசம்: இடம் பெயர்ந்த சனங்களைப் பராமரிக்கிறன் எண்டு திரியிறான். பள்ளிக்கூடமும் ஒழுங்காப் போறதில்ல. எனக்கெண்டால் பயமாயிருக்கு. நீயெண்டாலும் புத்தி சொல்லன் ராசா. உன்ர புத்தியாவது அவன்ர காதில விழட்டும்" என தனது ஆதங்கத்தைச் சதீசிடம் வெளியிட்டாள்.



"அம்மா நீங்கள் ஒண்டுக்கும் யோசியாதேயுங்கோ. நான் அவனோட கதைக்கிறன்" என்றவனின் மனதில் சிந்தனை ரேகை தோன்ற ஆரம்பித்தது. "மச்சான் என்ன கடுமையான யோசனை?" எனக் கேட்டுக்கொண்டே தான் சென்ற அலுவலை முடித்துக்கொண்டு வந்தான் வரன்.

வீடு செல்லும் வழியில் பல உணர்வலைகள் சதீசைத் தாக்கியது. வரனைப் போல் ஏன் எனக்கும் சிந்தனைகள் வரவில்லை. இன்றைய நிலையில் ஏன் போராட்டத்தோட ஒன்றிக்கயில்ல. அதற்குக் காரணம் எனது வீட்டுச் சூழலா? அல்லது எனது குறுகிய மனப்பான்மையா? எனப் பல கேள்விகளைத் தனக்குள் எழுப்பிக்கொண்டு வீடு போய்ச் சேர்ந்தான்.

"நீதானே இப்ப பயங்கர வேலையாய் திரிகிறாய்" என்ற சதீசின் இருபொருள் கலந்த கதை, வரனை உறுத்தியது.

"மச்சான் நான் இந்த காலகட்டத்தில செய்ய வேண்டியதைத்தான் செய்யிறன்: சனங்கள் மரத்தடியிலையும் பள்ளிக் கூடத்திலையும் இடம்பெயர்ந்து இருக்கேக்க, நாங்கள் உதவாமல் திரிகிறது சரியில்ல. என்னைப் பொறுத்த வரையில நான் செய்யிறது சரி. உனக்கு எப்படிப்படுகிறதோ எனக்குத் தெரியாது"

"சனங்களுக்கு உதவுறதைப் பற்றி நான் சொல்லயில்ல: நீ, இயக்கம் மண் விடுதலை எண்டு போறியோ என்றுதான் பயப்பிடுறன்" என்ற சதீசைப் பர்க்க வரனுக்கே பாவமாயிருந்தது.

"மச்சான் நீ, என்னை முழுமையா புரியல்ல: நான் ஆயுதமேந்தாட்டியும் மக்களுக்கு இந்த நிலையில உதவவேணும் எண்டதுதான் என்ர நோக்கம்."

"எல்லாம் உன்ர விருப்பம்: அப்ப நான் வீட்ட போட்டுவாறன். நீ, நாளைக்கு வீட்ட வாவன்" என்று கூறி வரனிடமும் தாயிடமும் விடை பெற்றுக்கொண்டு தனது வீடு நோக்கிப் புறப்பட்டான். வீடு செல்லும் வழியில் பல உணர்வலைகள் சதீசைத் தாக்கியது. வரனைப் போல் ஏன் எனக்கும் சிந்தனைகள் வரவில்லை.

இன்றைய நிலையில் ஏன் போராட்டத்தோட ஒன்றிக்கயில்ல. அதற்குக் காரணம் எனது வீட்டுச் சூழலா? அல்லது எனது குறுகிய மனப்பான்மையா? எனப் பல கேள்விகளைத் தனக்குள் எழுப்பிக்கொண்டு வீடு போய்ச் சேர்ந்தான்.

யாழ்ப்பாண இடம் பெயர்வும் கிளிநொச்சி இடம் பெயர்வும் இருவரையும் நன்றாகவே பாதித்திருந்தது. நலன்புரி நிலையத்தின் உணவுத் தட்டுப்பாடுகள், மருந்துத் தட்டுப்பாடுகள், சுகாதார சீர்கேடுகள், நடைமுறை வாழ்க்கைச் சிக்கல்கள் எல்லாம் இணைந்து இருவரின் மனப்பாதிப்பிற்கும் காரணமாயிற்று. "மச்சான் இந்தச் சனம் படுகிற கஸ்ரத்தைப் பார்த்தால், பெரிய வேதனையாய் இருக்கு" என்ற சதீசை......

"மச்சான் இதுக்கு நாங்கள் எல்லோரும் போராட வேணும்" எனும் வரனின் பதில் சிந்திக்கச் செய்தது. இருந்தும் இருவராலும் ஒரு உறுதியான முடிவை எடுக்க முடியவில்லை.

அன்றைய பொழுது விடிந்தது. வழமையான நலம்புரி நிலையத்தின் கலகலப்பு களை கட்டத் தொடங்கியது. வரனும் சதீசும் அன்றைய உணவுப் பிரச்சினை சம்பந்தமாக கதைத்துக் கொண்டு இருந்தார்கள்.

திடீரென மக்கள் பதற்றமடைய, வானத்தில் இரு 'கிபீர்' விமானங்கள் வட்டமிட்டன.

"மச்சான் சனத்த வெளியில நிக்காமல் மண்டபத்துக்குள்ள போகச் சொல்லு." "ஒருவரும் வெளியால போகாதேங்கோ: மண்டபத்துக்குள்ள போங்கோ" என வரன் விமானத்தை பாடசாலை முற்றத்தில் நின்றபடி பார்த்துக் கத்தினான்.

"மச்சான் இஞ்சதான் அடிக்கப் போறான்: ஐயோ சனம்" என மண்டப வாசலில் நின்றபடி சதீஸ் பதற்றமடைய, *'கிபீர்' பாடசாலை மீது குத்தி எழும்பியது. குண்டு பாடசாலை முற்றத்தில் வீழ்ந்தது. எங்கும் புகை மண்டலம்.*

*சனங்களின் அழுகையும் கத்தலும் "என்ர பிள்ள", "என்ர மகன்", "என்ர அக்கா" என்ற அவல ஓலம் வானை முட்டியது.* சதீஸ் மண்டப வாசலில் படுத்திருந்தவன், வரன் நின்ற முற்றத்திற்கு ஓடினான். வரனின் நெஞ்சிலும் வயிற்றிலும் இரத்தம் கசிய உயிர் பிரிந்தது. 'வரன்' எனக் கத்தினான் சதீஸ். எந்த மக்களுக்காக தனது உயிரை மதியாது தொண்டு செய்தானோ, அந்த மக்களின் மத்தியிலேயே வரன் எனும் பூமரம் சாய்ந்தது. நண்பனின் உயிரை விலையாகக் கொடுத்த பின்னராவது தனக்கு புதிய சிந்தனை வரவேண்டும் என அப்போது சதீஸ் நினைத்தான். ✲




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






## ஈழத்தவள் புதுமை

வாளேந்திய சிங்கத்தின் அடக்குமுறை உடைத்தெறிந்து
புரட்சித் தீயில் தினம் குளித்து - விடுதலை
வாழ்வுபெற ஈழத்தில் பிறந்த புயல்கள்-
நீங்கள் தொடுக்கும் அக்கினிப் போரில் விடிகிறது ஈழம்.
தங்கக் காப்பிழைத்த கைகளில்-இன்று
இயங்குது கருவிகள்.
பெண்ணினத்திற்கே பெருமை
எம் ஈழத்தவள் புதுமை!

**-துன்னாலையூர் குகன், யேர்மனி.**

## தாயே இன்னல் அகல்வாய்

உலகம் வியக்க புதுயுகம் படைப்போம்!
புத்தொளி கொடுப்போம்!
விலங்குடைப்போம் தாயே!
விடுதலை அடைவோம்!
உரம் கொண்ட தமிழர் நாம்;
உறுதிகொண்ட தலைவனை தந்தவளே!
மாவீர வேங்கைகளை ஈன்றவளே!
தமிழீழத்தாயே! இன்னல் அகல்வாய்!

**-இந்திரன் இளங்கோ.**

## பூவினம் போல எம் பூவையர்

பூவினம் எல்லாம் பூப்பது அந்தப்
பொழுதினில் உதிர்ந்திட வல்ல;
தன்னினம் தழைக்கத் தனைத் தரவன்றோ.
எம்மினப் பூவையர் பூத்தனர் இங்கே
பொழுதொடு மடிந்திட வல்ல;
தாவியே பகைதனைத் தொலைத்திட-
தமிழன்னை மானத்தைக் காத்திட-
தம்மினம் தழைத்திடத் தமைத்தரவன்றோ!

**-அமலா ஜெயந்தன்.**



## விடிவெள்ளி தெரியுதடா விலங்குடையப் போகுதடா

புறப்பட்டு விட்டார்கள்
புறமுதுகு காட்டார்கள்
விலங்குதனை உடைப்பார்கள்
புதுஉலகம் படைப்பார்கள்.
உலகத் தமிழினமே
ஒருகணம் நீ விழித்திருந்தால்
ஈழத்தாய் - அவளின்
விலங்குடையும் மறுகணமே.

**-பகவான், யேர்மனி.**

## எங்கிருந்தாய்

இத்தனை நாளும் எங்கிருந்தாய்
குண்டுகளின் சத்தங்களும்
குழந்தைகளின் அழுகுரல்களும்
தாய்மார்களின் அவலக் குரல்களும்
உன் காதால் கேட்க முடியவில்லையா?
பூமித்தாயே வெளியில் வந்தாயா?
உன் கையிலிருக்கும் வெண்புறாவைவிடு
உலகெலாம் பறந்து சென்று சொல்லட்டும்!

**-துஸ்யந்தி சற்குணநாதன், பிரான்ஸ்.**

## விடியல் காண்கிறது

சமூக மேம்பாடு பின்தள்ளும்
ஒடுக்குமுறை களைந்திட;
நம் மண்ணின் அவலம் தாங்கும்
பெண் தலை நிமிர்ந்திட;
தேச விடுதலை வேண்டும்!
தலைவன் நெறிப்படுத்தலில்
நம் கண்மணிகள் களமாட;
பெண்ணியம் விடியல் காண்கிறது!!

**-தனம், பிரான்ஸ்.**

## விலங்கு

பெண்ணுக்கு இட்ட
பெருவிலங்கை உடைத்தெறிய
முன்னுக்கு வந்த முத்தான மங்கையரே!
கண்ணீர் துடைத்தெறிவோம்!
பெண்ணடிமை, இனவாதம்
இன்றே அறுத்தெறிய
ஒன்றாகத் தூக்கிடுவோம்
எங்களிரு கைகளையும்!

**-ஈழநிலா, லண்டன்.**

ஆக்கங்கள் அனுப்பியோர் அனைவருக்கும் நன்றி:

யேர்மனி-கட்டுவன் இராசா சண்முகராசா, பூ. மகாராணி , க. மாலினி.
சுவிஸ்-புங்கையூர் த. மதி, சி. இராசலிங்கம்.
அவுஸ்த்திரேலியா-திருமதி மாலா. டென்மார்க்-செல்லம்மா. பாரிஸ்- தீபன்.

## வாசகர் கவனத்திற்கு !

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள இப்படத்திற்கு பொருந்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் கவிதை வரையுங்கள். உங்கள் ஆக்கங்களை **06- 02 - 1998** இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு கீழ்தரப்பட்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.



கவிதை அனுப்ப வேண்டிய முகவரி:

**'Kalathil',**
**Eelam House, 202Long Lane, London SE1 4QB.**

வாசகர் கடிதம்

களத்தில், லண்டன்.

என் மதிப்பிற்கும் விருப்பத்திற்கும் உரிய களத்தில் பத்திரிகைக்கு,
வாழ்த்தி உனது பிறக்கப்போகும் புத்தாண்டில் நீ மென்மேலும் புத்துணர்வடைய வேண்டும் என வாழ்த்தி உனது விருப்பத்தை தெரிவிக்கின்றேன்.
நான் யேர்மன் நாட்டில் வசித்துவருகிறேன். இங்கு வந்து ஒரு வருடகாலம்தான் ஆகிறது. வந்தகாலம் முதல் என் நண்பன் ஒருவனின் உதவியால் உன்னை படித்து வருகின்றேன். நீ சுமந்து வரும் கருத்துக்கள் எனது உள்ளத்தை ஈர்க்கிறது. தமிழீழத்தில் இருக்கும் வீர உணர்வு உன்னை படிக்கும் போது எனக்கு ஏற்படுகின்றது. தமிழ் மக்களுக்கு உரிய உண்மையான பிரச்சனையை நீ நன்கு எல்லோர்க்கும் எடுத்துக் காட்டுகின்றாய். சிலர் இந்த உணர்வை நஞ்சாககூட நினைக்கின்றார்கள். தமிழனாக இருந்துகொண்டும் இனத்தின் உரிமைகளை மறப்பவர்களை நினைத்து நான் கவலை அடைகின்றேன். நாங்கள் இடம் பெயர்ந்துதான் இங்கு வந்துள்ளோம். ஒரு காலத்தில் எமது தாய் பூமியான தமிழீழத்திற்கு தான் செல்லவேண்டும் என்பதை நீ ஆணித்தரமாக புரிய வைக்கின்றாய். அதை நினைத்து நான் பெருமைப்படுகின்றேன். உன்னுடன் நான் நெருங்கிய உறவை ஏற்படுத்த விரும்புகின்றேன். அதனால் உனது ஆசிரியர்களிடம் கூறி எனக்கும் பத்திரிகை அனுப்பிவைக்க முடியுமா? மிகவும் வேண்டிக் கேட்கிறேன். தயவுசெய்து இந்த உதவியைச் செய்வாயா? உனது வருகையை ஆவலுடன் எதிர்பார்த்து இதை நிறைவு செய்கிறேன்.

இப்படிக்கு
ஈழத்தமிழன் மதன், யேர்மனி 20--12-97

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வருமானத் திட்டமும் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும்

மனிதன் நாகரீகம் என்ற பெயரில் மனிதனை அடிமையாக்க எப்பொழுது நினைத்தானோ, அன்று தொடங்கியதே போராட்டம். போராட்டத்தின் விளைவு இடம் பெயர்வும் அவலவாழ்க்கையும் ஆகும். உலக வரலாற்றில் மறக்க முடியாதது இரண்டாம் உலக மகாயுத்தமாகும். இம்மகாயுத்தத்திலும் மக்கள் பல இன்னல்களை அனுபவித்ததுடன் உண்ணஉணவும் உடுக்க



உடையும் உறங்க உறையுளுமின்றி மிகவும் பரிதாபமான நிலைக்குத் தள்ளப்பட்டனர். இந்த நிலையில்தான், "நற்சிந்தனை உள்ளவர்களாலும் சேவை மனப்பாண்மை உள்ளவர்களாலும் இரக்க சிந்தனை உள்ளவர்களாலும் உருவாக்கப்பட்ட அமைப்பே அரச சார்பற்ற நிறுவனங்கள்" ஆகும்.

நம் ஈழத்திலும் காலத்திற்குக் காலம் பலவடிவங்களில் போராட்டங்கள் நடந்து, மக்கள் பல கஸ்டங்களையும் துன்பங்களையும் அனுபவித்தனர். இப்போராட்டங்களில் மிகவும் மோசமானதும் நாகரீக மக்கள் செய்யக் கூடாததுமான படுகொலைச் சம்பவங்களை உள்ளடக்கியதுமானதாக 1983ஆம் ஆண்டு யூலை மாதம் ஏற்பட்ட கலவரம் விளங்குகிறது. இதனைத்தொடர்ந்து மக்கள் போராட்டத்திற்குள் தள்ளப்பட்டு, இடம் பெயர்ந்து பல துன்பங்களை அனுபவித்தனர்.

இக்கழகம் தனது நோக்கம், இலட்சியம் என்பவற்றுக்கு ஏற்ப போராட்ட காலங்களிலோ இயற்கைக் காரணிகளால் ஏற்படும் வெள்ளப்பெருக்கு போன்ற காலகட்டத்தில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு முதலில் தற்காலிக முகாம்களை அமைத்து, உணவுகளை வழங்கி, பின் அவர்களுக்கு நிரந்தரமாக வீடுகள் கட்டிக்கொடுத்தும் உணவுப் பொருட்களைக் கொடுத்தும் மற்றும் அவர்களுக்குத் தேவையான உடை, பாய், பானை மற்றும் உபகரணங்களை வழங்கியும் சேவை செய்வதுடன் நில்லாது, சிறார்களுக்கும் மாணவர்களுக்கும் கல்விநிலையங்களை அமைத்தும் போசாக்கு நிலையங்களை அமைத்து போசாக்கு அற்ற பிள்ளைகளுக்கும் கர்ப்பிணித் தாய்மாருக்கும் சத்துணவுகளை வழங்கியும் சுயசார்பு நிதியத்தின்மூலம் சுயசார்புக் கடன்களை வழங்கி மக்கள் சுயமாக வாழ வழி செய்து கொடுத்ததுடன் நில்லாது, ஐந்து கோடி ரூபாவுக்கு மேல் முதலீடு செய்து வருமானத் திட்டங்களையும் உருவாக்கி. தானும் பயன்பெற்று மக்களையும் பயன் பெறச் செய்து மக்களின் தேவைகளையும் போக்கி வருகின்றது.

போராட்டச் சூழ்நிலையில் இடம் பெயர்ந்து வாழும் மக்கிளின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் முகமாகவும் சுரண்டல் பேர்வழிகளிடம் இருந்து மக்களைக் காப்பாற்றும் நோக்கத்துடனும் புனர்வாழ்வுக் கழகம் தன்னால் அமைத்துக் கொடுக்கப்பட்ட குடியேற்றத் திட்டங்களில் கிராமிய விற்பனை நிலையங்களை ஸ்தாபித்து, அதன்மூலம் அத்தியாவசியப் பொருட்களையும் ஏனைய பொருட்களையும் குறைந்த விலையில் வழங்கிய மக்களின் நலனைப் பேணுவதுடன், அக்குடியேற்றத்திட்டத்தில் உள்ள படித்தவர்களுக்கு இக்கிராமிய விற்பனை நிலையத்தில் வேலை வாய்ப்பளித்தும் மக்களை முன்னேற்றி வருகிறது.

குடியேற்றத் திட்டங்களில் வறுமை எனும் கொடிய பேயின் கையில் சிக்கி, இன்னலுற்று வாழ்கின்ற பெண்களின் நலன் கருதி தும்பு அடித்தல், கயிறு திரித்தல், பாய் பின்னுதல், கிடுகு பின்னுதல், நெசவுத்தொழில் போன்ற வருமானத் திட்டங்களை அறிமுகப்படுத்தி, அதனைச் சிறப்பாக நடைமுறைப்படுத்தி வருவதுடன் தானும் எதிர்காலத்தில் எவரின் உதவியுமின்றி, மக்களுக்கு சிறந்த பணியாற்ற வேண்டிய பணத்தினையும் சேமித்து வருகிறது.

பேரினவாதங்கொண்ட அரசினால் நசுக்கப்பட்டு இன்னலுறுகின்ற விவசாயிகளின் நலனைப் பேணுமுகமாகவும் யுத்தத்தின் காரணமாக ஏற்பட்டுள்ள உணவுப் பிரச்சினைகளைப் போக்கித் தண்ணிறைவு காணவும் விவசாய நிலையங்கள், விதை உற்பத்தி நிலையங்கள், நல்லின பழமரக்கன்றுகள் உற்பத்தித் திட்டங்கள் போன்ற வருமானத் திட்டங்களை அமைத்து இதன்மூலம் விவசாயிகளுக்குத் தேவையான நல்லின விதைகளை உற்பத்தி செய்து வழங்கியும் பசளை, கிருமிநாசினி போன்ற பொருட்களை வழங்கியும் விவசாயிகளின் தேவையைப் பூர்த்தி செய்வதுடன், நாட்டிற்கும் சேவையாற்றி தன்னுடைய பணியையும் சிறப்பாகச் செயல்படுத்துவதற்குரிய பணத்தினையும் பெற்று வருகிறது.

இடம்பெயர்வின் மூலம் தங்களுக்குத் தேவையான மூலப்பொருட்களை இழந்து தொழில் இன்றித் துன்பத்தில் வாழ்கிற மீனவகுடும்பங்களின் துயரினைப் போக்கி, நல்வாழ்வழிக்கும் நோக்குடன் கரைவலைத்திட்டம், படகுமூலம் மீன்பிடித்தல் போன்ற பாரிய வருமானத் திட்டங்களை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்தி வருவதுடன், தன்னுடன் இணைந்து செயல்பட்டு வரும் பங்காளி நிறுவனங்களை வளர்க்கும் நோக்குடனும் எதிர்காலத்தில் தன்னைப்போல் அந்நிறுவனங்களும் எவருடைய உதவியுமின்றி தன்னுடைய முயற்சியினால் வருமானத்தினை பெற்று மக்களுக்கு சிறந்த பணியாற்றச் செய்யும் நோக்குடனும் 1996ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 26ம் திகதி அறிமுகப்படுத்தப்பட்ட பத்துக்கோடி ரூபாவில், "துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவைத் திட்டத்தின்" மூலம் பங்காளி நிறுவனங்களுக்கு வருமானத் திட்டங்களை அமைப்பதற்கு மூலதனத்தினை வழங்கி, அதிமேலான உன்னதமான சேவையை ஆற்றி வருவது, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பரந்த மனப்பான்மையை எடுத்தியம்புகிறது.

மக்களின் நலன்கருதி பல வருமானத் திட்டங்களை மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தி மக்களுக்குத் தொழில் வாய்ப்பை வழங்கியும் மக்களின் தேவையைப் பூர்த்திசெய்தும் விவசாயிகளை முன்னேற்றியும் மீனவர்களின் துயரினைத் துடைத்தும் விதவைகளின் இன்னல்களை அகற்றியும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மக்களுக்குச் சிறந்த பணியாற்றி வருகிறது.

**''மனிதனை மனிதனாக்குவை**
**உதவிகளும் வசதிகளுமல்ல,**
**இடையூறுகளும் துன்பங்களுமே.''**


## தளபதி கேணல் கிட்டுவினதும் ஒன்பது வீரவேங்கைகளினதும்

# ஐந்தாம் ஆண்டு நினைவெழுச்சி

**16-01-93 இல் வங்கக் கடலில் காவியமான எமது வேங்கைகளின் ஐந்தாம் ஆண்டு நினைவுகள், கலை நிகழ்ச்சிகளுடன் எழுச்சியாகக் கொண்டாடப்படவுள்ளது.**



குறிப்பு :

இவ்வெழுச்சி விழாவில் விடுதலைப் பாட்டுப்போட்டி விசேட நிகழ்ச்சியாக நடைபெறவுள்ளது.

விடுதலைப் பாட்டுப்போட்டியில் கலந்து கொள்வோருக்கு:

விடுதலைப் பாட்டுப்போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் பாடகர், தாம் விரும்பிய 2 தமிழீழ விடுதலைப் பாடல்களை தமது சொந்தக் குரலில் பாடி, அவற்றை ஒடியோ கசெற் ஒன்றில் பதிந்து கீழ்க் காணும் 'ஈழம் இல்லம்' விலாசத்திற்கு **05-01-1998** க்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும். தெரிவு செய்யப்படுவோர் மட்டுமே போட்டியில் பாட அழைக்கப்படுவர்.

U.T.O- "Eelam House"
202 Long Lane
London SE1 4QB

**காலம்:**

**18-01-98**
**ஞாயிறு**
**மாலை 6.00 மணி.**

**இடம்:**

**LLOYDS PARK THEATRE**
**WINNS TERRACE**
**(Off Forest Road)**
**WALTHAMSTOW**
**LONDON E17-4PP**

(Nearest Tube Station :
Black Horse Road)

மேலதிக தொடர்புகட்கு:-

**0171-403 4554, 0956-119 362 , 0956-314 370, 0956-329 660.**

www.tamilarangam.net

# புயல்கள் ஓயட்டும்
# புலிகள் வீரம் பொங்கட்டும்

இனிமை கலந்த புதிய வருடம்
இங்கே பிறக்குது!
பனிகள் படரும் வீதியெங்கும்
இளமை நிறைக்குது!

கவலை மறந்து உலகம் யாவும்
கானம் பாடுது...
கனவில் மட்டும் எங்கள் தேசம்
காலம் கழிக்குது!

மரங்கள் நிறைந்த இடங்கள் யாவும்
மனையாய் மாறுது - எம்
சனங்கள் அங்கே இன்று
பிணமாய் ஆகுது!

தொழுது துன்பம் போக்கும் கோயில்மீது
குண்டு போட்டாராம்!
தமிழை உரைத்த தமிழரெல்லாம்
சிறையில் மாண்டாராம்!

நிலையை உரைக்க காற்றே
நீயும் நீண்டு வீசிடு!
உலகத்திருக்கும் உண்மைத் தமிழர்
காதில் ஓதிடு!

புதிதாய் மலரும் இந்த ஆண்டில்
புயல்கள் ஓயட்டும்!
புலிகள் வீரம் பொங்கிப் பரவ
பகைவர் ஓடட்டும்!

-தமிழொளி



T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F: 091-611 3179

W.T.C.C
Komquader Weg - 12
7007 Chur, Switzerland
Tel: 081-252-91-29

T.C.G
Post Fach - 340261
51624 Gummersbach - 34
Germany

U.T.O., 211 Katherine Rd,
London E6 1BU, UK.
Tel: 0181 - 503 4294,
Fax: 0181 - 470 8593

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo -1, Norway
T: 022-350 930 F: 22381040

W.T.C.C.

L.T.T.E
P.O.Box 47, 7400 HERNING
DENMARK.
Tel/Fax: 97-155299

T.C.C
Gr. Hertoginnein - 106
2517 EL Den Haag, Nederland
Tel: 070-346 1963, Fax: 070 362 5172

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F 436 81191

T.C.C
Vissingebacken 11 1TR
16364 Spanga, Sweden.

T.C.C
P.O.Box 378, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 690 8224

அச்சுப்பதிப்பு வாசன் அச்சகம் 0181 646 2885